

பைந்தமிழ்க்காவலர்

பழ. முத்தப்பனார்

கிருங்கை சேதுபதி

கபிலன் பதிப்பகம்

பைந்தமிழ்க் காவலர் பழ. முத்தப்பனார்

கிருங்கை சேதுபதி

கபிலன் பதிப்பகம்
12, 7 ஆவது குறுக்குத்தெரு
பாரதிநகர்
புதுச்சேரி – 8.

பைந்தமிழ்க் காவலர் பழ. முத்தப்பனார்
PAINTHAMIZHK KAVALAR PAZHA. MUTHAPPANAR
(வாழ்க்கை வரலாறு)
கிருங்கை சேதுபதி ©
KIRUNGAI SETHUPATHI
முதற்பதிப்பு மே 2006
பக்கங்கள்

வெளியீடு:
கபிலன் பதிப்பகம்
12, 7வது குறுக்குத் தெரு
பாரதிநகர்
புதுச்சேரி- 605 008.

வடிவமைப்பு :
சொ. அருணன்
9442379558

அச்சிட்டோர் :
சூர்யா பிரிண்டர் சொலூசன்ஸ் (பி) லிட்.
15/2 P. S. R ரோடு, சிவகாசி.
04562 – 223315
சிவகாசி.

விலை : ரூ. 40/–

பதிப்புரை

வாழ்க்கை வரலாறுகளால் ஆனது என்பதை விடவும் வரலாறுகளை வாழ்க்கைதான் தீர்மானிக்கின்றது என்பது இன்னும் பொருந்தும். தனிமனித சமுதாய வரலாறுகள் பின்னிப் பிணைந்து உருவாகும் முன்னேற்றப்பாதை வருந்தலைமுறைக் கான வழியமைத்துச் செல்லும் என்பது உறுதி.

வாய்ப்புக் கிட்டுமெனில் எவ்லோருக்கும் சொல்ல ஒவ்வொருவருக்கும் ஒரு வரலாறு இருக்கும். சொல்ல வாய்க்காதவர்களுக்கும் சொல்லப் பெறும் வரலாறுகள் இனிமையோடு அசைபோட உதவும் என்பது இலக்கியம் தரும் ஒரு இனிய வசதி. இதற்கு விழாக்கள் ஒரு வாய்ப்பு.

தன்காலத்தில் தனக்கான கடமைகளைத் துடிப்புடன் ஆற்றிக்கொண்டிருக்கும் **பைந்தமிழ்க் காவலர் பழ. முத்தப்பனாருக்கு** இது மணிவிழாக் காலம். அறுபது முறை பூமியோடு சேர்ந்து சூரியனைச் சுற்றிவரும் வாய்ப்புப் பெற்ற பலருக்கு மத்தியில் சூரிய ஒளியின் கீழ் வாழும் மனிதர்களுக்கு மொழி வழியாய்க் கல்வியை வழங்கி வாழ்க்கைக்கு உதவியவர் இவர்.

இவர் கடந்து வந்த பாதை பலருக்குக் கடக்க உதவும் வழிகாட்டியாகப் பயன்படக் கூடும் என்பதனால், இவரின் மாணாக்கர் எழுதிய இவ்வரலாற்று நூலைத் தமிழுலகிற்குத் தருவதில் இனிது மகிழ்கின்றோம்.

உள்ளடக்கம்

ஒரு வரலாற்றின் வரலாறு

தமிழாகரர் தெ. முருகசாமி
முன்னாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

"இதில் மண்வாசனையும் மனிதவாடையும் வீசுகின்றன" என்று ஒரு நாவலுக்கு ஓர் எழுத்தாளர் எழுதிய நூல்மதிப்பீட்டுரையை நினைத்துப் பார்க்கிறேன். அந்த மதிப்பீடு, "வரலாறாகிறது வாழ்க்கை" என்ற அட்டகாசமான தலைப்புடன் தொடங்கும் "பைந்தமிழ்க் காவலர் பழ. முத்தப்பனார்" என்னும் இந்நூலிற்கும் பொருந்தும் என்பது என் கணிப்பு.

இவ்வரலாற்று நாயகர் டாக்டர் பழ. முத்தப்பரும், நானும் மயிலம் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியில் ஒரே நாளில் (16. 07. 1967) விரிவுரையாளராகச் சேர்ந்தோம். கல்லூரியிலும் மற்ற இடங்களிலும் எங்களை, பி. எம், (P.M), டி.எம் (D.M) என்றுதான் அழைப்பார்கள். இதுபற்றி நான் வேடிக்கையாகக் கூறுவதுண்டு. அதாவது, "பி.எம்முக்குள் டி.எம் அடக்கம், ஆனால் டி.எம்முக்குள் பி.எம் அடங்கார்" என்று. அந்த வேடிக்கைப் பேச்சு எப்படியோ எனது வாழ்வில் நண்பரது முழு உறவுகளும் பின்னிப் பிணைந்து உண்மையாகி விட்டதால்தான் பேராசிரியர் கிருங்கைசேதுபதி எழுதிய இந்த நூலில் நானும் வாழ்கிறேன்.

நான் இப்படிச் சொன்னதற்கு ஒரு மீள்பார்வை உண்டு. மயிலத்தில் ஒன்றாகச் சேர்ந்த நண்பரது பணி நிரந்தரம். எனது

பணியோ, தற்காலிகம். இதனால் எங்கள் இருவரையும் அறியாமல் எனக்குப் பணி நிரந்தரம் ஆவதற்குரிய சூழல் ஒன்று காரைக்குடியில் காத்திருந்ததுதான் வியப்பு!

1970 மார்ச்சுத் திங்கள் திட்டமிட்டபடி நண்பரது சொந்த ஊரான புதுவயலுக்குச் சரசுவதி சங்க ஆண்டுவிழாவில் பேச மேத் திங்கள் 8 ஆம் நாள் நண்பருடன் சென்று தங்கியபோது காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியில் பணிவாய்ப்பிருப்பதை அறிந்து *ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்* என்றபடி, பணிக்கான விண்ணப்பத்தைக் கொடுத்த அளவில் ஒரு திங்களுக்குப் பின்னர் நடந்த நேர்முகத் தேர்வு மூலம் காரைக்குடியில் எனது தமிழ்ப்பணி நிரந்தரமானது. இது திட்டமிடப்பட்ட ஒன்றில் திட்டமிடப் படாமல் நடந்த ஒன்றாகக் கருத இலக்கியத்தைச் சாட்சிக்கு அழைக்கின்றேன்.

தாடகையைக் கொல்லும் திட்டத்தோடு வந்த விசுவாமித்திரர் இராமனைக் கூட்டிப் போனதும் காரியம் முடிந்தபிறகு திட்டமிடப்படாத நிலையில் அவனை அவர் மிதிலைக் கூட்டிப் போக அங்கே வில்முறிப்பு, சீதைமணம், போன்ற ஏற்றங்கள் எல்லாம் இராமனுக்கு ஏற்பட்டன. இவற்றோடு சரசுவதி சங்கத்திற்கு எனது வருகையையும் இராமசாமி தமிழ்க் கல்லூரிப் பணியையும் ஒப்பிட்டால் நான் அழைத்த இலக்கிய சாட்சி சரிதானே! அன்று தொட்டு எனது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் நண்பரது பங்களிப்பு தொடர்வதை,

"*ஒன்றே வேறே என்றிரு பால்வயின்*
ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்"

என்ற தொல்காப்பியப் பொருண்மையால் உண்மை என நான் உணர்கிறேன்.

புலவர் பாடும் புகழுடையோய் என மன்னனைச் சங்க இலக்கியம் போற்றும். அதற்குத் தக மன்னர் பின்னோர் எனப் பாராட்டப்பெறும் நகரத்தார் மரபில் வந்த நண்பர், அவரது மாணாக்கரால் இந்நூல் எழுதப்பட்டதோடு அமுத.இளவழகன் என்னும் மாணாக்கரால் எழுதி இந்நூலில் இணைக்கப்பட்ட முத்தாற்றுப்படையும் நண்பரின் புகழைப் போற்றுகின்றன.

"தாம்வாழ் பதியில் தகவுறு பலரைத்
தம்பதி யாக்கிய இம்பர் கோமான்"

என்ற முத்தாற்றுப்படையின் தொடர்ப்பொருள் என்னோடு தொடர்புடையதும் ஆகும்.

திருமணமானவராக மயிலத்திற்கு வந்த நண்பர் திருமணமாகாதிருந்த எனக்குப் பெண் பார்த்து மணம் முடித்த பெருமையில் அவருக்கும் அவரது துணைவியார் திருமதி அழகம்மை ஆச்சிக்கும் பங்கு உண்டு. நான் காரைக்குடியில் பணியேற்ற நிலையில் அவர் சொல்வார், "எனது மாமனார் ஊரில் அவர், அவரது மாமனார் ஊரில் நான்'' என்று. இதனால் எங்களுக்குள் குடும்ப உறவும் விரிந்தது.

நான் காரைக்குடிக்குக் குடும்பத்துடன் வரப்போகிறேன் என்றதும் எனக்காகக் குடியேற வீடுபார்த்துத் தயாராக வைத்த பெருமை தாயுள்ளம் கொண்ட நண்பரின் சகோதரி மீனாட்சி ஆச்சி அவர்களையே சாரும். வீடுபார்க்க வேண்டியதில் உள்ள கடுமை எனக்கு இல்லாமல் செய்ததோடு எல்லா வகையிலும் என் மனைவி பொன்மொழிக்குத் தாயாகவே இருந்தார்கள். ஆம்! மனைவியின் மகப்பேறு காலங்களில் ஆச்சிதான் தாய்.

1979இல் நாங்கள் சொந்தமாய் ஒருவீடு வாங்கினோம். அதில் குடியேறிய நாளில் நகரத்தார் மரபுப்படி மங்கலச் சங்கெடுத்து ஊதி, வாழ்த்தியபிறகே பால் காய்ச்சினோம் என்பது என்று நினைத்தாலும் இனிக்கும் நினைவே! குறிப்பாகச்

சொன்னால், அவர்கள் குடும்பத்தினர் எல்லோரும் எங்களை ஓர் அங்கத் தினராகவே கொண்டாடினார்கள் என்பது மிகையன்று. ஆச்சி அவர்களின் கணவரும் நண்பரின் அருமை அத்தானுமான திருமிகு. கயி. இராமநாதன் செட்டியார் அவர்களைக் குறிப்பிட வேண்டும். அவர்கள் எனக்குச் சொன்னதோர் அறிவுரை என்னை நகரத்தார் பெருமக்களோடு உறவு கொள்வதற்கான பாலமாக இருந்தது. அதுதான், "செட்டிநாட்டுக்கு வாழவந்துள்ள நீங்கள், விபூதி பூசாமல் எங்கும் போகக் கூடாது, மயிலத்தில் இருந்த உங்களுக்கு இதைச் சொல்லவேண்டாம், என்றாலும் சொல்கிறேன்" என்ற அறிவுரைதான் எனக்குச் செட்டிநாட்டளவில் நல்ல விலாசம் தேடித்தந்திருக்கலாம் என்று உணர்கிறேன்.

புதுவயல் கயிலாச விநாயகர் கோயில் கந்தர் சஷ்டி விழாவில் 29 ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிமுகமாகவும் காரைக்குடியில் பல பாங்கரில் சமய உரை ஆற்றவும் திருநீறே மூலதனம் எனலாம். நண்பரது மைத்துனர் திரு. இராம. கயிலாயம், திரு. இராம.நாராயணன், திரு. இராம. பழநியப்பன் ஆகிய மூவரும் எங்கட்கு அந்நியப்படாத உடன்பிறப்புகளாகவே இருந்தனர். இவ்வாறே இந்நூலில் குறித்தவாறு புதுவயலில் நண்பரது சகோதரர்கள் அனைவரும் எங்களைக் குடும்ப உறவாகவே கொண்டாடினர். முத்தப்பரின் தாயார் திருமதி இலக்குமி ஆச்சி அவர்கள் என் மனைவி பொன்மொழியை "எங்க பேத்தி போலப் பாத்துக்கிறாங்கய்யா'' என்று என்னிடம் சொன்னார்கள். நண்பரது மனைவி, ஆச்சிக்குப் பேத்தி என்ற உரிமைபோலே என் மனைவியையும் அப்படி உறவு சொல்லிக் கொண்டாடியதற்கு நாங்கள்தான் கொடுத்து வைத்தவர்கள். பொதுவாகச் சொன்னால், நாங்கள் காரைக்குடியில் இருந்தவரை நண்பரது குடும்பத்தின் அடைக்கலப் பொருளாக இருந்தோம் என்றால் அதில் எல்லாம் அடக்கம்.

இப்படி நான் விவரமாக எழுத வேண்டியதன் காரணம் யாதெனில் நான் இந்த வரலாற்றில் ஊடும் பாவுமாய் உள்ளவன் என்பவன் மட்டுமின்றி நண்பரின் புதுவயல் இல்லத்தை வெகுவாக அறிமுகப்படுத்தும் இந்நூலின் மறுபகுதியாக உள்ள நண்பரின் துணைவியாரது இல்லத்தின் குறிப்புகளைத் தொகுத்துக் கூறல் எனது நன்றிக்கும் பொருத்தமானது என்பதால் மனந்திறந்து பேசலானேன்.

நண்பர் மயிலத்தை விட்டுப் பதவி உயர்வால் மேலைச் சிவபுரிக்கு வந்தார் என்பது ஒரு செய்திதான். ஆனால் அவர் அங்கே சிகரந்தொட்ட சாதனையாளராக ஓய்வு பெற்றார் என்பதே வரலாறு. அவரது ஆளுமைத்திறன் பலரால் மதிப்பிடப்பட்டது. வீரசைவச் சித்தாந்தச் செம்மல், வை. இரத்தினசபாபதி அவர்கள் நண்பரது ஆற்றலை வியந்து மயிலம் கல்லூரிக்குப்பரிந்துரைத்தார். தமிழ்ச்செம்மல் வ.சுப.மா அவர்கள் மேலைச்சிவபுரியில் முதல்வராக்கினார். திருச்சி செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரியினர் நண்பரைப் பணி ஓய்வு பெறும் நாளிலேயே தம் கல்லூரிக்கு முதல்வராக்கினார்கள் என்பது அவரது ஆற்றலுக்கான அங்கீகாரம்.

தமிழ் இலக்கிய மேடைகளில் நண்பர் தம்மைத் தனியாக அடையாளம் காணத்தக்க வகையில் தமிழை வளர்த்துக் கொள்ள அடித்தளம் இட்ட இடம் மாமயிலம். அவர் மயிலத்தை விட்டுப் பிரிகிறார். மயிலமே கலங்குகிறது. அதன் வெளிப்பாட்டை "காம்பற்ற மலர்போல நாங்கள் இங்குக் கலங்குகிறோம்" என்று அன்னாருக்கு எழுதித்தந்த மாணக்கர்களின் கவிதை, கவிதையில்லை கலங்கியோர் உள்ளம்.

நண்பரது பணியில் மேலைச்சிவபுரியின் தொடர்பு பற்றிக் கூற வேண்டுமானால் மேலைச்சிவபுரி அன்றும் இன்றும் என்பதாக எழுதப்படும்போது முத்தப்பரது பங்களிப்பு பல

பக்களில் எழுத வேண்டியிருக்கும் என்பதை யாவரும் உணர்வர். நிரந்தரமான கல்வி வளர்ச்சியின் புதுப் பரிமாணமாக அக்கல்லூரியின் கட்டிட வளர்ச்சிக்கு முத்தப்பரே காரணமாவார்.

தமிழ்க்கல்லூரியில் பட்டமளிப்பா? எனக் கேட்டோர் வியக்க ஒரு புதுத்தடத்தையே உருவாக்கிய உன்னதத்திற்கும், தமிழ் தொடர்புடைய முதுகலை, ஆராய்ச்சி போன்றவற்றிற்கும் மாலை நேரக் கல்லூரி வளர்ச்சிக்கும் முத்தப்பரின் உழைப்பு, நல்ல புகழ் விளைச்சலை மேலைச்சிவபுரிக்குத் தொடர்ந்து அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். இவற்றிற் கெல்லாம் ஆன்றோர்களால் உருவாக்கப்பட்ட சன்மார்க்க சபையினரது ஒத்துழைப்பும் கல்லூரி நிருவாகத்தினரின் உறுதுணையும், பக்கத்துணையாயிருந்தன என்பதுதான் உண்மை. இஃது வெறும் புகழ்ச்சியுரையன்று. இப்படித் தான் தொட்டதெல்லாம் துலங்கச் செய்யும் தொடர்ச்சியாகவே திருச்சி செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரிக்கும் சொந்தக் கட்டிடங்களை உருவாக்கித்தந்த பெருமை முத்தப்பருக்கு உண்டு.

கசப்பையும் உண்ணும் உணவில் ஒரு சுவையாகச் சேர்த்தனர். அதனால்தான் அது சரிவிகித உணவாகக் கருதப்பட்டது. அதுபோலத்தான் நண்பரது பணித்தொடர்ச்சியில் சில கசப்பான தொய்வுகள் இருந்ததை இந்நூல் இலைமறையாகச் சுட்டத் தவறவில்லை.

தான் வளர்ந்தார்; தான் சார்ந்த நிறுவனத்தை வளர்த்தார்; இப்படியாக வளரும்போதே தன் வாரிசுகளையும் உருவாக்கிக் கொண்டே வளர்ந்தார். இவ்வுண்மை இந்நூலில் பகலவன் போல் பளிச்செனக் கூறப்பட்டுள்ளது. மாணாக்கர்களைப் பயத்தாலன்றிப் பாசத்தால், அச்சத்தாலன்றி அன்பால், அதிகாரத்தாலன்றி அரவணைப்பால் உருவாக்கிய வரலாறு இங்குப் பதிவாகி உள்ளது.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பதற்கு நண்பரும் நண்பரது மனைவியுமே சான்றாவார். தனது மகன் பழனியப்பனை விடவும் என்மீது அவர் (முத்தப்பன்) காட்டிய அன்பு எழுத்துக் கடந்தது. இவரது துணைவியார் அழகம்மை எனக்கும் தாய்தான் என எழுதிய சேதுபதியின் வாசகம் "நான் அனுப்புவது கடிதம் அல்ல, உள்ளம்" என்ற திரைப்படப் பாடலின் வரிப்பொருள்களின் உண்மையை நினைக்கத்தூண்டுகிறது.

திருமதி அழகம்மை ஆச்சி, வள்ளுவர் கூறியபடி நண்பருக்கு வாழ்க்கைத்துணை நலமே. என்றாலும் நண்பரது பேச்சைக் கேட்டு; திறனாய்வு செய்யும் முதல் திறனாய்வாளர் என்பதை என் போன்றோர் நன்குணர்வர். மனைவியை மனையறத்தின் வேர் என்பார் சேக்கிழார். அச்சான்றோர் வாய்மொழிக்கான இலக்கணமே ஆச்சிதான் எனலாம்.

குடும்ப உறவைப்போல நண்பரது தமிழ்ச் சுற்றமும் அகன்றது; விரிந்தது. சிறப்பாகக் குறிப்பிட வேண்டுமெனில் பேராசிரியர் ச. வே. சு, பா. நமச்சிவாயம், க.ப அறவாணன் போன்றோரின் தமிழ்ச் சொந்தம் நீள நினைக்கத்தக்கது.

நிறைவாக, ஒன்றைக் குறிப்பிட வேண்டும். எங்கள் இருவரது தமிழ்ப்பணியின் தொடக்கம் முதல் இன்றுவரை திருமடங்களின் தொடர்பைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மயிலத்தின் வீரசைவத் திருமடத்தின் 19 ஆம் பட்டத்து சுவாமிகளின் ஆதரவும், குன்றக்குடி ஆதீனக்கர்த்தர்களின் அரவணைப்பும் எங்களுக்கு என்றும் காமதேனும் கற்பகத் தருவும் ஆகும் என்பது நாங்கள் இருவரும் ஒருசேரப் பெற்ற பெரும்பேறே எனலாம்.

ஆக, இவற்றையெல்லாம் கூட்டி அசை போட்டால் இந்நூலைப் படிப்போர்க்கு ஒன்று உறுதியாகத் தெரியும்.

அதுதான், "நாம் வரலாறு படிக்கலாம் அல்லது வரலாறு படைக்கலாம். ஆனால் எல்லோரும் வரலாறாக முடியாது. அது ஒருசிலர்க்கே" என்ற க.ப அறவாணனின் எழுத்தைப் போல அந்தச் சிலரில் ஒருவர்தான் பழ. முத்தப்பர். அவர் ஆச்சி அழகம்மையோடும் தமிழோடும் வாழ்ந்துவரும் வாழ்க்கை வரலாறாகிறது. தூண்டா விளக்கெனினும் தூண்டுகோல் ஒன்று தேவை என்பது போல இவ்வரலாற்றைச் கூற ஒருவர் தேவை. அவர்தான் பேராசிரியர் கிருங்கை சொ. சேதுபதி.

நன்றி!

ஒப்பம்.

புதுச்சேரி – 9 தெ. முருகசாமி

வாழ்த்துரை

இனிய நண்பர் பழ.முத்தப்பனாரின் அருந்தமிழ்த் தொண்டினை எல்லோரும் அறியும்படியாகச் சுவைபடச் சொல்லியிருக்கின்றது இந்நூல்.

எளிமை, இனிமை, நேயம், அடக்கம் முதலிய பண்புகள் கொண்ட பழ.முத்தப்பரின் மூன்று கட்டப் பணிகள் இந்நூலுள் சிறப்பாக விளக்கம் பெற்றிருக்கின்றன.

நாடறிந்த பேச்சாளரான இவரது நிர்வாகத் திறன் அறிந்துதான் செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி நிர்வாகம் இவரை முதல்வராக்கி மகிழ்ந்திருக்கின்றது என்பது அறிய மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இன்னும் இவர் செய்வதற்கு நிறைய இருக்கின்றது. அத்தகு பொறுப்புகள் இவரை வந்து சேரவேண்டும். பழ.முத்தப்பர் தம் குடும்பமும் சுற்றமும் மகிழ, நண்பர்கள் வாழ்த்த மணிவிழாக் காண்கின்றார். அந்த நன்னாளில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் திருக்கரங்களால் வெளியிடப் பெறும் இந்நூல் நிலைத்துப் பயன்தரவேணுமாய் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

வாழ்த்துகளுடன்
பொறியாளர் சு.ஆதப்பன் பி.இ.,
பங்குதாரர்,
இந்திரா இஞ்சினியரிங் எண்டர்பிரைசஸ்
திருச்சிராப்பள்ளி

வரலாகிறது வாழ்க்கை

காலம் செய்யும் லீலாவிநோதங்களின் மீது வாழ்க்கைப்படகு ஓடுவது இனிமையாகத்தான் இருக்கின்றது. மெல்ல நகர்ந்து விரைந்தோடிய காலம் ஒரு சுற்று முடித்துத் திரும்பி வந்திருக்கின்றது. அதற்குள் வயது அறுபது ஆகிவிட்டது என்று வருடங்காட்டி கணக்குச் சொல்கின்றது. வாழ்க்கை வரலாறு ஆகியிருக்கின்றது.

நாளும் நகரும் பொழுதுகளின் மீது தமது செயல்களை எழுதிக் கொண்டிருக்கும் பழ.முத்தப்பனாருக்கு இது மணிவிழா ஆண்டு. இடைவிடா முயற்சி. தொடர் உழைப்பு, தமிழின் மீது தணியாக் காதல் முதலான கூறுகளைக் கொண்டு இயங்கும் இவரது வாழ்வின் சுவடுகள் காலத்தால் கவனித்துப் போற்றத்தக்கவை என்பதால் இந்நூல் எழுதப் பெறுகின்றது.

இவர், யான் பயின்ற கல்லூரியின் முதல்வர் என்பது கடந்து எனக்கு முன்னால் நின்று தமிழைத் தந்தவர். பல நிலைகளில் தோழமை பேணித் தந்தையும் ஆனவர். சமயங்களில் இவரோடு முரணி நின்றபோதும் என்பால் அன்பு காட்டியவர். தனது மகன் பழனியப்பனை விடவும் என்மீது காட்டிய இவரது அன்பு எழுத்துக் கடந்தது.

இவரது துணைவியார் அழகம்மை எனக்கும் தாய்தான். பிரித்துப் பார்க்க ஏதுமில்லாத அன்பில் இந்த நூல் இரண்டு இரவுகளை விழுங்கிப் பிறந்திருக்கின்றது. தொலைபேசியின்வழி சில விளக்கங்கள் பெற்று உருவான இந்நூலை ஓடுகின்ற அவசரத்தில் ஒரு பார்வை செலுத்தி உற்சாகப்படுத்தியவர் பழ.முத்தப்பனாரின் இனிய புதல்வர், எம் கெழுதகை நண்பர்

மு.பழனியப்பன். உடனிருந்து சரிபார்த்து இனியதொரு அணிந்துரையும் நல்கி இன்னொரு முத்தப்பராகியிருப்பவர் எம் புதுவைவாழ்வில் முன்னின்று அன்பளிக்கும் பேராசிரியர் தெ.முருகசாமி அவர்கள். நூலாக்கிய கபிலன் பதிப்பகத்திற்கும், துணைநின்ற யாவருக்கும் என் நன்றி என்றும் உரியது.

மணிவிழாப் போதில் மலர்க்கொத்தைத் தந்தோ, மாலை அல்லது சால்வையை அணிவித்தோ மகிழ்வதை விடவும் தமிழுக்குத் தொண்டாற்றிவரும் பைந்தமிழ்க்காவலர் பழ.முத்தப்பர் தம்பதியர்க்கு எனக்குத் தெரிந்த அளவில் இத்தமிழ்மாலை சூட்டிப் பணிவது பொருத்தமாக இருக்கும்.

இந்த நூலை ஏற்றுப் படிக்கும் உங்கள் சார்பாகவும் வாழ்த்துமலர் ஒன்று அன்னாருக்குத் தமிழ்வழி அஞ்சலாவது உறுதி.

இன்னும் விடாது தமிழ்ப் பணியாற்ற வரும் இளந்தலைமுறையினருக்கு இந்நூல் துணைநின்றால் எழுதிய பயன் கிடைக்கும். வற்றாத ஜீவநதியாய் அன்பு ஓடிக்கொண்டிருக்கும் வரை எழுதவும் சொல்லவும் இன்னும் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. மணிவிழா இப்போது. வரும் முத்து, பவழ விழாக்களிலும் நாம் வாழ்த்திசைக்கும் வாய்ப்பு நிச்சயம் கிட்டும்.

அன்பு சிவமெனில் அன்புதான் சக்தியும். அன்புதான் நீங்களும், நானும்..யாரும் யாவும்... அன்பு தழைக்கவரும் அமுதத் தமிழ் காக்கும் பைந்தமிழ்க்காவலர் பழ. முத்தப்பர் தம்பதியர் பல்லாண்டு இனிது வாழ்க.

வணக்கத்துடன்

புதுச்சேரி

கிருங்கை சேதுபதி



பன்னிரு திருமுறை வழிபாடு

திருஞானசம்பந்தர்

1. பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே!

2. மந்திர மாவது நீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளதுநீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான்திருநீறே!

3. மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே!

திருநாவுக்கரசர்

4. இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே!

5. நங்க டம்பனைப் பெற்றவள் டங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகிடப் பதே!

6. மின்காட்டும் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்
பொன்காட்டக் கடிகொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்ட கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண்அவனென் சிந்தை யானே!

சுந்தரர்

7. பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே!

மாணிக்கவாசகர்

8. விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணும் பெருந்துறையில்

கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய்!

திருமாளிகைத் தேவர்

9. ஒளிவளர் விளக்கே உவப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே!

திருமூலர்

10. யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே!

காரைக்கால் அம்மையார்

11. அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே —அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

சேக்கிழார்

12. என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளம் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

சாற்றுபுகழ் கொள்க தகைத்து!

வெண்பாச்சிற்பி வி. இலக்குவனம்

பாங்குறவே பல்லாண்டு பாடிய பாவலர்தம்
வீங்குபுகழ் இங்குரைக்க வீற்றிருக்கும் - ஓங்குபுகழ்
முத்தப்பர் நான்கண்ட மூதறிஞர் சொற்பொழிவைச்
சித்தமுறக் கேட்டல் சிறப்பு!

சிறப்பான சீர்தலைப்பில் சிந்தனையைத் தூண்டும்
மறப்பரிய சொற்பொழிவால் மக்கள் - துறப்பரிய
ஆசை விலக அவர்கூறும் நல்வழிகள்
பூசையெனக் கொள்வோம் புரிந்து!

புரிகின்றார் முத்தப்பர் பூந்தமிழில் - செம்மை
வரிகொண்ட பல்லாண்டுப் பாடல் - நெறிவிக்கும்
ஞானக் கருத்துக்கள் நம்மனத்தும் நின்றொளிர
தேனெனத் தந்திடுவார் தேர்ந்து!

களிப்பில் திளைத்திடுவார் கற்பகம்போல் கல்வி
அளிக்கின்றார் மாணவர்கள் ஆசை - துளிர்த்திட
நித்தம் உழைக்கின்றார் நேர்மை வரையறையில்
சித்தம் தெளிவுறச் செய்து!

செய்பணியில் தூய்மை சினந்தழுவா நேர்மையதே
எய்துவகை சேர்க்கும் இனியவாம் - மெய்யிது
கூறும் புகழ்ச்சியிலை கொள்ளும் மகிழ்ச்சியவர்
சாரும் நிலையதற்குச் சான்று!

சான்றுபல கூறிடுவார் தத்துவங்கள் தந்திடுவார்
தோன்றுசைவ மாமறைகள் சூத்திரங்கள் - ஆன்றமைந்த
மேற்கோள்கள் காட்டி விளக்கிடுநம் முத்தப்பர்
ஆற்றல் நமைக்கவரும் ஆம்!

ஆராய்ச்சி செய்தார் அரியபல உண்மைகள்
நேராகக் கண்ட நினைவுகளைச் - சீராகப்
புத்தகமாய்த் தந்து பொலிவுமிகச் சேர்த்திட்டார்
முத்தப்பர் தாய்த்தமிழ்க்கே முன்!

முன்நிற்பர் தொண்டாற்ற முத்தப்பர் வாழ்வியலில்
முன்னேற்றம் கண்ட முதுகலைஞர் - நன்நோக்கில்
ஆற்றும் முதல்வர் அரும்பணியும் ஆல்போல
சாற்றுபுகழ் கொள்க தழைத்து!

தழைக்கட்டும் சைவநெறி தங்கட்டும் தெய்வ
விழைவுநெறி மேவட்டும் மேலாய் - உழைப்புநெறி
மல்கிடட்டும் பண்புநெறி, மாண்புநெறி ஓங்கட்டும்
பல்கிடட்டும் நந்தமிழர் பாங்கு!

(சிங்கப்பூர் ஸ்ரீ ருத்திர காளியம்மன் ஆலயத்தில் வாசித்தளிக்கப்பெற்ற வாழ்த்துப்பா!) **05. 08. 1998**

11.05.2006

வியாழக்கிழமை


புதுவயலில் மணிவிழாக் காணும்



பழ. முத்தப்பன் - அழகம்மை ஆச்சி

தம்பதியர்க்கு

காணிக்கை...



'தமிழாகரர்' விருது வழங்கும்
தவத்திரு. குன்றக்குடி அடிகளார் 6.6.1990



தருமை ஆதீனத் தம்பிரான் வழங்கும்
'சிவஞானச் செம்மல்' விருது 18.12.2005



திருவாவடுதுறை ஆதீனம் வழங்கும்
'சித்தாந்தச் செம்மல்' விருது 2.2.2006

அரங்குகளில்....



பட்டமளிப்பு விழா



பொற்பதக்கம் வென்ற புதல்வருடன்



எழுத்தாளர் ஜெயகாந்தனுடன்



சிலம் பொலி செல்லப்பனுடன்



முனைவர் தமிழண்ணலுடன்




சத்தியசீலன்
அறிவொளி
திருவாளர்கள்
குழுவினருடன்



சேக்கிழாராக



கம்பராக



கி.வா.ஜ. விருது
பட்டிமன்ற மாமணி




அறக்கட்டளைச் சொற்பொழிவு



நூல் வெளியீடு



சன்மார்க்க
சபை
முத்துவிழா



பயின்ற – பணிபுரிந்த கல்லூரிக்கு
தோரணவாயில் ரூபாய் 45,000 செலவில்



'வாசிக்க வாங்க...'

உறவுகள்



மாமனார் மணிவிழாவில்



சாந்தியில்



மகனின் குடும்பம்



மகளின் குடும்பம்



மழலைச் செல்வங்கள்

பைந்தமிழ்க் காவலர் பழ. முத்தப்பனார்

புதுவயல் என்னும் புகழ் வயல்

தொலைநோக்குப் பார்வையோடு தம்மையும் தமது தேசத்தையும் ஒருசேர உயர்த்திக் கொள்வதற்காக, காலம் கருதி அமைப்புகளை உருவாக்கிச் சிறப்பாகக் கொண்டு நோக்குவதில் வல்லவர்கள் நகரத்தார்கள். அப்படியான பல்வேறு பொதுத் தொண்டு இயக்கங்களைச் செட்டிநாட்டுப் பகுதிகளில் கண்டறியமுடியும். அப்பகுதிகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஊர்களுள் ஒன்று புதுவயல்.

"பொன்னும் கலையும் பொதுநலமும்
பொங்கிப் பொலியும் புதுவயல்"

என்று கவிமணியாராலும்,

"செட்டிமார்தம் நாட்டினிலே
சிறக்கும் நகரம் புதுவயலாம்
மட்டில் அறங்கள் வளர்க்கின்ற
வணிகர் வாழும் திருநகராம்"

என்று வாகீச கலாநிதி கி.வா.ஜ அவர்களாலும் போற்றப் பெற்ற திருநகர் புதுவயலாகும். தெய்வ பக்தி, தேசபக்தி இவற்றோடு தமிழின்மீதும் அளவற்ற பக்திகொண்டு தமது வாழ்வைப் புகழுக்கென அர்ப்பணித்து நிலைபெற்ற நகரத்தார் சமூகத்தைச் சார்ந்த மூவர் கூடி, புதுவயலில் தொடங்கிய அமைப்பு ஸ்ரீ சரசுவதி சங்கமாகும்.

ஞானப் பிரகாச சபை, லலிதா விலாஸ் ரீடிங் ரூம், தட்சிணா மூர்த்தி சங்கம், தன வணிக நிலா போஜன கமிட்டி, இளைஞர் சங்கம், முதலிய அமைப்புகள் அக்காலத்தே புதுவயலில் தோன்றிய போதிலும் காலத்தால் பல காணாது போயின.

கலைமகள் நிலை கொண்ட கலைக்கோயில்

முன்னர்ச் சுட்டிய அமைப்புகளுக்கு நடுவில், துந்துபி ஆண்டு ஆடித்திங்கள் 9ஆம் நாள் (22. 07. 1922) தொடங்கப் பெற்று இன்றுவரையிலும் சீரோடும் சிறப்போடும் கலை மற்றும் கல்விப் பணிகளை ஆற்றி வருகிற சங்கம் ஸ்ரீ சரசுவதி சங்கமாகும்.

புதுவயலைச் சார்ந்த சா.சிதம்பரம் செட்டியார், பெரி.அரு. பெரியகருப்பன் செட்டியார், பெரி.சித.இராமசாமி செட்டியார் ஆகியோர் கூடி உருவாக்கிய இச்சங்கத்தின் செவிலிமையில் உருவானது, ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை.

மகாகவி பாரதியார் தொடங்கி, தந்தை பெரியார், வ.உ.சிதம்பரனார், தோழர் ஜீவானந்தம், கல்கி, சொ. முருகப்பா, நாவலர் சோமசுந்தர பாரதியார், திரு.வி.க, பண்டிதமணியார், டாக்டர் மு.வ, நாமக்கல் கவிஞர், சிலம்புச் செல்வர்,பெரும்புலவர் அ.மு சரவண முதலியார், ஐயம்பெருமாள் கோனார், இரசிகமணி டி.கே.சி, கம்பனடிப்பொடி சா.க, கி.வா.ஜ, ஔவை துரைசாமி, தவத்திரு குன்றக்குடி அடிகளார், தினமணி ஏ.என். சிவராமன், காஞ்சி சங்கராச்சாரியார் முதலான சான்றோர் பெருமக்கள் பலரும் வருகை தந்து ,இருந்து தமிழ் வளர்த்த இச்சங்கத்தால் உருவாக்கப் பெற்றவருள் ஒருவர்தான் இந்நூலின் பாட்டுடைத் தலைவர், முனைவர் பழ. முத்தப்பனார்.

பாண்டிநாட்டுப் பைந்தமிழ் முத்து

பாண்டிநன்னாடு முத்துடைத்து என்பது இலக்கிய வழக்கு. பாண்டிநாட்டுக் கடலில் தோன்றுவது வெண்முத்து. செட்டிநாட்டுப் (புது) வயலில் தோன்றியது இத்தமிழ்முத்து.

ஆம்.புதுவயல் ஸ்ரீசரசுவதி சங்கத்தோடு, தொடர்புடைய யெ. பெரி. வீர. பழனியப்பச் செட்டியார், இலக்குமி ஆச்சி ஆகிய தம்பதியர்க்கு 17.05.1946 இல் புதல்வனாகப் பிறந்தார் பழ.முத்தப்பனார்.

இவருடன் பிறந்த மூத்த சகோதரர்கள் சோலையப்பன், ரெங்கநாதன், ஏகப்பன் ஆகியோர் ஆவர். இவருடன் பிறந்த தமக்கையர் மீனாட்சி ஆச்சி, மற்றும் கண்ணபுரம் ஆச்சி ஆகியோர் ஆவர்.

வெ. பெரி. வீர. பழ. குடும்பத்தின் கடைக்குட்டியாகிய முத்தப்பன் படித்து உருவான பள்ளி ஸ்ரீ சரசுவதி சங்கத்தின் செவிலிமையில் உருவான ஸ்ரீ சரசுவதி வித்யாசாலை ஆகும். திருவாளர்கள் சண்முக சுந்தரம், இராம. வீரப்பன் ஆகிய ஆசிரியர்களின் ஊக்குவிப்பால் கல்வியிலும் தமிழ் மொழியிலும் மிகுந்த விருப்புக் கொண்டு கற்று வளர்ந்திருக்கிறார் இவர்.



விளையும் பயிர்

தொடக்கக் கல்வியை அடுத்து உயர்நிலைக் கல்வி பெற புதுவயலை அடுத்துள்ள கண்டனூர் சிட்டாள் ஆச்சி உயர்நிலைப் பள்ளியில் தமது சகோதரர்களோடு கல்வி கற்கப் போனார் முத்தப்பனார். எழுத்து, பேச்சு இரண்டிலும் வல்லவராக இவரை உருவாக்குவதில் நாற்றங்காலாக விளங்கியது ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை என்றால், இப்பயிர் விளையும் நன்செய்யாக இருந்தது கண்டனூர்ப் பள்ளியாகும். அப்போதே தேவகோட்டைக் கல்வி மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டியில் மகாகவி பாரதியார் குறித்துப் பேசி, முதற்பரிசு வென்றிருக்கிறார். அதற்கெனத் 'திரு. வி. க வாழ்க்கைக் குறிப்புகள்' நூலை பரிசாகப் பெற்றிருக்கிறார். அந்த நூலின் தூண்டுதலால் சமய சிந்தனை, மொழிப்பற்று, தேசிய உணர்ச்சி, ஆகியவற்றை உள்வாங்கிக் கொண்டவரானார். அப்பள்ளியில் பயிலுங்காலத்தே சென்னை மாகாணத் தமிழாசிரியர் கழகம் நடத்திய தமிழ்க் கட்டுரைப் போட்டியில்

"சின்னஞ்சிறு வயதினிலே" எனும் தலைப்பில் கட்டுரை எழுதி முதற்பரிசு பெற்றிருக்கிறார். கல்வியிலிருந்த ஆர்வத்தை விடவும் தமிழில் இவர் கொண்டிருந்த நாட்டத்தை உடனிருந்து கண்டு ஊக்குவித்த பெருமகனார் இவர்தம் தமிழாசிரியர் திரு. மு. பழனிவேலு ஆவார். அன்னாரது நெறிகாட்டலுக்கிணங்க மேலைச்சிவபுரிக்கு தமிழ் பயில வந்தார் முத்தப்பனார்.

தமிழ்க் கல்லூரி மாணாக்கராய்...

1963 முதல் 1967 வரை தமிழ்ப் புலவராகத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டார் இவர். சைவமும் தமிழும் பேணி வளர்க்கும் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி இம்முத்தினை தமிழ் முத்தாக்கித் தரணிக்குத் தந்தது எனலாம். புலவர் படிப்பிற்கான அனைத்துச் செலவுகளையும் தனதாக ஏற்று இவருக்கு உதவிய பெருந்தகை இவரது அண்ணன் திரு. பழ. ரெங்கநாதன் என்பதை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இவர் சொல்லத் தவறுவதில்லை. தமிழ்ப் புலவராகத் தம்மைத் தகுதிப் படுத்திக் கொண்ட புலவர் முத்தப்பனார் மேலும் தமது தமிழ்க்கல்வியை ஆழப்படுத்திக் கொள்ளச் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணாக்கராயினார்.

தில்லைச் சிற்றம்பலத்தில்

தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ள சிவத் தலங்களுள் ஒன்று சிவபுரித்தலம். இங்கு பழ.முத்தப்பனாரின் பெரியம்மா மகனார் திரு.கே.வி.எஸ்.அழகப்பச் செட்டியார் ஆதரவில் தங்கி, ஆங்குள்ள அருள்மிகு கனகாம்பிகை உடனாய உச்சிநாதப் பெருமான் திருக்கோயில் அறப்பணிகளைக் கவனித்து வந்தவண்ணம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல் பயிலும் மாணாக்கராயினார். அக்காலத்தே மாலை வேளைகளில் அப்பகுதி

ஆலயவிழாக்களில் சொற்பொழிவாற்றவும் செய்திருக்கின்றார், பழ.முத்தப்பனார்.

திருமண வாழ்வில்

பி.ஓ.எல். படிப்பினை இரண்டாண்டுகள் பயின்ற அவர் அதனை நிறைவுபடுத்திக்கொள்ளுமுன்பே தமது சொந்தத் தமக்கையார் திருமதி மீனாட்சி ஆச்சியின் ஒரே புதல்வியாகிய அழகம்மையாரைத் தமது வாழ்க்கைத் துணைநலமாக ஏற்றுக் கொண்டார். 24.04.1968 அன்று காரைக்குடியில் அவர்களது திருமண நிகழ்வு இனிதே நிகழ்ந்தேறியது.

அக்கால முறைப்படி மூன்று நாள் விழாவாக நடைபெற்ற அத்திருமணவிழாவில் வாழ்த்துரை வழங்கியவர் அன்னாரது பள்ளிப்பருவத்துத் தமிழாசிரியர். திரு மு.பழனிவேலு. அவரைத் தொடர்ந்து, மேலைச்சிவபுரிப் பேராசிரியர் திரு.மு.இராமலிங்கம், கவிஞர் அர.சிங்கார வடிவேலர், சிவகங்கை பகீரத நாச்சியப்பன் ஆகியோரும் வாழ்த்துரை நல்கினர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலை பயின்ற இவர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றதோடு பல்கலைக் கழக அளவில் பத்தாவது இடத்தினையும் பெற்றார்.

II. மயிலத்தில்

மயிலம் கல்லூரித் தமிழ்விரிவுரையாளராய்...

பி.ஓ.எல். படிப்பினை நிறைவு செய்யுமுன்பே இவரைத் தமிழ்ப் பணியாற்றத் தம்மோடு இணைத்துக் கொண்டது மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியாகும்.அதற்கென இவரை ஆற்றுப் படுத்தியவர் "ஞானத்தமிழாகரர்" முனைவர் வை. ரத்தின சபாபதி ஆவார். அவரது நெறிகாட்டலின்படி மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக 16. 07. 1969 இல் பணியேற்றார் பழ. முத்தப்பனார். பணிக்காலத்தில் இவரது உற்ற துணையாக விளங்கிய பேராசிரியர் தெ. முருகசாமி ஆவார். மயிலத்தில் தற்காலிகப் பணியில் இருந்த இவரை, காரைக்குடி இராமசாமித் தமிழ்க்கல்லூரிக்குப் பேராசிரியராக்கியது பழ.முத்தப்பனாருடனான நட்பு என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்துப் பேராசிரியர் தெ.முருகசாமி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"1970இல் மேமாதம் 8ஆம் நாள் புதுவயலில் நடந்த சரசுவதி சங்க ஆண்டுவிழாவிற்கு நண்பர் பழ.முத்தப்பரால் அழைக்கப் பெற்றேன். நிகழ்ச்சி முடிந்த மறுநாள் காரைக்குடியில் உள்ள அவரது ஆச்சி இல்லத்திற்கு வந்தோம்.அங்கிருந்த தினமணியில், 'காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரிக்கு விரிவுரையாளர்கள் தேவை' என்ற விளம்பரத்தைப் பார்த்தேன். மயிலத்தில் தற்காலிகப் பணியில் இருந்த நான் இது நிரந்தரப் பணி என எண்ணி, வந்த இடத்தில் இப்படி ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பி விண்ணப்பிக்க நினைத்ததை நண்பரிடம் சொன்னேன். உடனே அவரது ஆச்சி அவர்கள் அவரது உள்ளம் போல் ஒரு வெள்ளைத்தாள் தந்து வாழ்த்தினார்கள்.

அந்த வாழ்த்துப்பதிவோடு விண்ணப்பத்தை எழுதிக்கொண்டு நானும் நண்பரும் கல்லூரி நிறுவனர் இல்லத்திற்குச் சென்றோம். நிறுவனரின் துணைவியார்அவர்கள் வீட்டு முகப்புக் கதவின் தாழ் திறந்து வாங்க என்று வாஞ்சையுடன் வரவேற்றது விண்ணப்பிக்கும் எனது பணிக்கான பூட்டுக்குத் திறவுகோல் போல் இருந்தது. குளிர்ச்சியான அந்த வரவேற்பு மழையில் நனைந்த நாங்கள் உள்ளே சென்றதும் கல்லூரி முதல்வர் திரு. சி. செல்வத்தாண்டவருடன் நிறுவனர் அவர்கள் உரை யாடிக்கொண்டிருந்தார்கள். பார்த்ததும் வணங்கினோம். நண்பர் என்னை அறிமுகம் செய்தார். நான் விண்ணப்பத்தைக் கொடுத்தேன். முறைப்படி நேர்முகத் தேர்வு நடக்கும். தகுதியுள்ளோர் தேர்வு செய்யப்படுவார் என நிறுவனர் கூறியபடி ஒரு திங்களுக்குள் நான் அழைக்கப்பட்டேன். கல்லூரித் தலைவர் வ.சுப. மாணிக்கனார் நடத்திய நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டோருள் நானும் தற்போதைய முதல்வர் திரு.ச. மெய்யம்மை அவர்களும் தேர்வு செய்யப் பெற்றோம்.

1.07.1970இல் பணியில் சேர்ந்தேன். புதுவயலுக்கு அழைக்கப் பட்டபோது இப்படி ஒரு வாய்ப்பு காரைக்குடியில் காத்திருந்தது என்று நானோ நண்பரோ அறியோம். ஆனால் எதிர்பாராமல் அது நடந்தது. இவற்றுக்கெல்லாம் தோற்றுவாயாய் இருந்த நண்பர் பழ.முத்தப்பரின் பழகு தமிழ் நட்பை என்னால் மறக்க முடியாது... "என்கின்றார் அவர்.

என்றும் கலைமகள் திருப்பணியில்

ஆக, மயிலம் கல்லூரியில் தம்பணிதொடர்ந்தாலும், தன்னை உருவாக்கிய புதுவயல் ஸ்ரீ சரசுவதி சங்கத்தை மறவாமல் அதன் கல்வி மற்றும் கலைப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட முத்தப்பனார் அச்சங்கத்தின் செயலராகப் பொறுப்பேற்று 1966 ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரையிலும் செவ்வனே ஆற்றிவருகின்றார். அச்சங்கத்தின் பல பணிகளைச் சிறப்புடன் நிறைவேற்றி வந்திருக்கின்ற இவர் 1982இல் மணிவிழாமலரை அற்புதமாக உருவாக்கியிருக்கின்றார்.

அம்மலரில் ஸ்ரீசரசுவதி சங்கத்தின் தலைவர் பெரி. சித. இராமசாமி என்பார் அறுபதாண்டு வரலாற்றுப் பாதையில் ஸ்ரீசரசுவதி சங்கம் எனும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். "அக்காலத்தில் ரெங்கோன், பர்மா போன்ற வெளிநாடுகளில் பொருளீட்டச் சென்று தாய்நாடு திரும்பி வந்தவுடன் சங்க அங்கத்தினர்கள் ஸ்ரீ சரசுவதி சங்கத்தின் வளர்ச்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். எனவே தான், சங்கம் மிகப் பெருமைகளை அடைந்தது. தற்காலத்தில் உள்நாட்டிலேயே பொருளீட்டுவது என்பதால், அங்கத்தினர்கள் முழுமையும் பங்கு பெற முடியவில்லை. அந்தக் குறையை நீக்க பதினைந்து வருடங்களாக இன்றையச் செயலர் பழ.முத்தப்பன் அவர்கள் அங்கத்தினர்களின் ஆதரவோடு தன்னலங்கருதாது, முழுமையும் பாடுபட்டு வருகிறார்கள். அவர்களின் முயற்சியால்தான் இன்றைய விழாவும், பெண்கள் உயர்நிலைப் பள்ளி உருவாவதும் என்றால் அது தவறில்லை" என்று குறிப்பிடுகின்றார்.

விபரந்தெரிந்த நாள் முதலாய்த் தமது வாழ்வின் வழி காட்டியாகத் திகழ்வது புதுவயல் ஸ்ரீ சரசுவதி சங்கம் என்று குறிப்பிடும் பழ. முத்தப்பனார், தமிழ்ப்பற்று, தேசிய உணர்ச்சி, கலை மற்றும் கல்விப் பணிகளில் ஆர்வமோடு இயங்கத் தூண்டுகோலாக அமைந்தது என்கிறார். கடன் வாங்காது சிக்கனமாக எளிமையாக வாழ்தல் அச்சங்கத்திடம் கற்றுக் கொண்ட முறைமை என்றும் குறிப்பிடுகின்றார்.

தமிழாசிரியர்களின் தமிழ்ப் பேராசிரியராக...


மயிலம் கல்லூரி பல்லாற்றானும் இவராற்றல் வெளிப்படக் காரணமாக இருந்த களம் எனலாம். மயிலத்தில் பணியாற்றிய காலத்தில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, மற்றும் புதுச்சேரி பகுதிகளைச் சார்ந்த இடைநிலை ஆசிரியர்கட்குத் தமிழ் பயிற்றுவித்துத் தமிழாசிரியராக்கிய பெருமை இவர்க்கு உண்டு. இன்றளவும் இப்பகுதிசார் தமிழாசிரியர்கள் நன்றியுடன் இவரைக் குறிப்பிடுவதோடு தமது

குடும்பத்துடன் இவரது இல்லத்திற்கு வந்து வாழ்த்துப் பெற்றுச் செல்வதுண்டு. அதேபோல அத்தகைய அன்பர்களின் இல்ல விழாக்களுக்குச் சென்று இவர் வாழ்த்துதலும் உண்டு.

மயிலம் கல்லூரியில் பணியாற்றியபோது உடனிருந்து அன்பு பாராட்டியவர்கள் பேராசிரியப் பெருமக்கள் திரு. ஆ.சிவலிங்கனார், மகாவித்துவான் திரு. வே. சிவசுப்பிரமணியனார் முதலியோராவர்.

பட்டிமன்ற மாமணி

மயிலம் சார்ந்த பகுதிகளில் பட்டிதொட்டி எங்கும் சென்று இலக்கியத்தையும், பக்தியுணர்வையும் தமது பட்டிமண்டப உரைத்திறனால் பரப்பியவர் பழ. முத்தப்பனாவார். இவரது மேடைப் பணிகளுக்குத் தோன்றாத் துணையாக விளங்கியவர் திருவாளர்கள். விழுப்புரம் மு.க.சங்கரன் மற்றும், புதுவயல் சிந்தனைக் கவிஞர். பெரி. சிவனடியான் ஆகியோர் ஆவர். இவரது பட்டிமண்டப உரைப் பாங்கறிந்து விழுப்புரம் வட்டத்தைச் சார்ந்த வளவனூர்த் தமிழ்ச் சங்கம் வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன் அவர்களைக் கொண்டு பட்டிமன்ற மாமணி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.



ஆய்வு மாணாக்கராய்...

பணியாற்றும் காலத்தில் பேசுவதோடு தம்பணியை அமைத்துக் கொள்ளாது தமக்கு ஆர்வமான சைவசித்தாந்தத்தில் தன்னை ஆழங்காற்படுத்திக் கொள்ள விரும்பினார் பழ.முத்தப்பனார்.

மேலமங்கலம் ராமதாசு சுவாமிகளின் அணுக்கச் சீடராகத் தம்மை



ஆக்கிக் கொண்ட இவர் குருகுலம் அழகரடிகளிடத்தில் சிவஞான போதம் பாடம் கேட்டுப் பயின்றார். அருணந்திச் சிவாச்சாரியார் குறித்த ஐயங்களைச் சைவசித்தாந்தப் பெருமேதை சிவத்திரு. முரு.பழ. ரத்தினஞ் செட்டியாரவர்களிடத்தில் கேட்டுத் தெளிந்தார்.அதனைத் தொடர்ந்து தமது தேடலை ஆய்வாகக் கொண்டு முனைவர் பட்டம் பெற விரும்பினார் இவர். முனைவர் பட்டத்திற்காகச் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தம்மை இணைத்துக் கொண்டு அதன் இயக்குநர் முனைவர் ச.வே.சுப்பிரமணியனாரின் நெறிகாட்டலின்படி அருணந்தி சிவாச்சாரியார் ஓர் ஆய்வு எனும் தலைப்பின் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார்.

இவரது வாய்மொழித் தேர்வின்போது ஏற்பட்ட இடர்பாட்டினை முன்னின்று தீர்த்து வைத்தவர் இவரது அண்ணன் சோலையப்பன் ஆவார். இன்றளவும் இவர்களது குடும்பத்தின் தலைவராயிருந்து தந்தைபோல் நிர்வகித்து வரும் நல்லவர் அவர்.

இவரது சைவசித்தாந்தப் புலமையறிந்து மதுராந்தகம் வட்டத்தைச் சார்ந்த குருகுலம் திருக்குறள்திரு.குருபழநி அடிகள் சிவஞானபோதச் செம்மல் என்னும் பட்டத்தினை வழங்கி மகிழ்ந்தார். திருமிகு தேமொழியார் பைந்தமிழ்க் காவலர் என்னும் பட்டம் நல்கிப் பாராட்டினார்.

இலங்கைப் பயணம்

இவ்வாறு சைவசித்தாந்தத்தில் வல்லராக இவர் திகழ்ந்த பழ.முத்தப்பனார், 1982இல் சைவசித்தாந்த சமாஜ விழாவில் உரையாற்றுவதற்காக, சைவசித்தாந்தச் செம்மல் திரு. முரு.பழ. ரத்தினஞ் செட்டியார் அவர்களுடன் இலங்கைப் பயணம் மேற்கொண்டார். தமது துணைவியாரோடு இலங்கைப் பகுதிகளில் சமயத் தமிழ் பரப்பிப் புகழோடும் பாராட்டோடும் தாயகம் திரும்பிய அவர்களைப் பெரியதொரு துயரச் செய்தி எதிர்கொண்டழைத்தது. ஆம். அவரைச் சான்றோனாக்கி அவையத்து முந்தியிருக்கச் செய்த தந்தையார் திரு. யெ.பெரி. வீர.பழனியப்பச் செட்டியார் அமரராகிவிட்டார் என்பதே அச்செய்தியாகும்.

அரங்குகளில் முழங்கும் இளஞ்சிங்கம்

மயிலம் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் இப்பகுதி சார்ந்த தமிழ்நிகழ்வுகள் அனைத்திலும் பெரும்பாலும் பங்கு கொள்பவராக இவர் திகழ்ந் திருக்கின்றார். எனினும் முதன் முதலாகப் புதுச்சேரி கம்பன் கழகத்தில் இவரை அரங்கேற்றி மகிழ்ந்தவர் அக்கழகச் செயலர் கம்பன் சீர் பரவும் அ.அருணகிரியார் ஆவார். அதனைத் தொடர்ந்து காரைக்குடிக் கம்பன் கழகத்திலும் இவரது அரங்கேற்றம் நிகழ்ந்தது. பாரதி நூற்றாண்டு விழாக் காலம் அது. கும்பனைச் சந்தித்த அனுமன் என்ற தலைப்பில் திருவாளர் க.கு.கோதண்டராமன் அவர்கள் தலைமையில் உரையாற்றியிருக்கின்றார் பழ.முத்தப்பனார். அந்நிகழ்வின் நிறைவில் கம்பனடிப்பொடி திரு.சா.க. அவர்கள், அதே அரங்கில், இந்த இளஞ்சிங்கம் நாளை நாட்டரசன் கோட்டையில் தா.பாண்டியன் பேசவேண்டிய இடத்தில் பேசுவார் என்று குறிப்பிட்டுப் பேசவும் செய்வித்தார். திரு.எஸ்.ஆர்.கே (எஸ்.இராம கிருஷ்ணன்) அவர்கள் தலைமையில் உரையாற்றியிருக்கின்றார்.

நல்லறமாய இல்லறம்

மயிலம் கல்லூரியில் இவர் பணியாற்றிய காலத்தில் இவரது இல்லத்திற்கு வருகை தந்த சான்றோர் பலராவர். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் இயல்பினரான இவரும், இவருக்கு உற்ற துணையாக இயங்கும் அழகம்மை ஆச்சியும் ஆற்றிய இல்லற வாழ்விற்கு இலக்கியங்களாக பழனியப்பனும், மீனாட்சியும் பிறந்தது இம்மண்ணில் தான். ஆண்டுதோறும் ஜனவரி 26இல் மயிலத்தில் நடைபெறும் படிவிழாவில் அன்னதானம் செய்வதனைப் பல்லாண்டுகள் நிறைவேற்றி வந்திருக்கின்றனர்.

பதிப்புத் துறையில்...

இக்கல்லூரியில் பணியாற்றிய காலத்திலேயே, தமது சொந்தப் பதிப்பகமாக மீனாட்சி நூலகம் எனத் தொடங்கி நூல்களை வெளியிட முனைந்தவர் பழ.முத்தப்பனார்.திருமுறைகளில் அகக்கோட்பாடு, அருணந்தி சிவாச்சாரியாரின் நூல்கள் ஓர் ஆய்வு ஆகிய தமது நூல்களையும், தமது தலைமை மாணக்கராகிய அமுத. இளவழகன் எழுதிய அடிகளாரின் திருக்குறள் அறம் ஓர் ஆய்வு, முத்தாற்றுப்படை ஆகியவற்றை வெளியிட்டார். அத்தோடு, யெ. மு. சொ. அறக்கட்டளையின் வழியாக தமிழண்ணலின் மக்களை எட்டிய மறைந்த தமிழ் சுப. அண்ணாமலையாரின் நூல்கள் ஆகியவற்றையும் பதிப்பித்துள்ளார்.

விழா நாயகராக...

விழுப்புரம் பகுதிகளைச் சார்ந்த இவர்தம் இடைநிலை ஆசிரிய மாணாக்கர்கள் ஒருங்குகூடி இவர் முனைவர் பட்டம் பெற்றமைக்காக நடத்திய பாராட்டுவிழாவில் இவர் எழுதிய திருமுறைகளில் அகக் கோட்பாடு என்ற நூலையும் வெளியிட்டு மகிழ்ந்தனர்.

தவத்திரு.இராமதாசு சுவாமிகள் தலைமையில், முனைவர் ஆறு.அழகப்பன், முனைவர் ச.வே.சுப்பிரமணியன், பேராசிரியர்கள் து.கார்த்திகேயன், ஆ.சிவலிங்கனார், தெ.முருகசாமி முதலான அறிஞர் பெருமக்கள் குழும, 28.09.1986இல் மிகச் சிறப்பாக விழுப்புரத்தில் அவ்விழா நிகழ்ந்தேறியிருக்கின்றது.அது சமயம் பலரும் கலந்து கொண்டு பாராட்டி மகிழ்ந்தனர்.

ஆசிரியரின் நம்பிக்கை பலித்தது

இவ்விழாவில் பங்கேற்க இயலாதோர் தமது எண்ணங்களைக் கடிதங்களில் மூலம் அளித்து மகிழ்ந்தனர். அவற்றுள் அன்னாரை உருவாக்கிய அவர்தம் பேராசிரியர் டாக்டர். வெ.சு.அழகப்பனார் எழுதிய கடிதம் குறிப்பிடத்தக்கது.அக்கடிதத்துள், *''தாங்கள் டாக்டர் பட்டம் பெற்ற செய்தி அழைப்பு வழி அறிந்து மகிழ்ந்தேன். துடிப்பும், துணிவும் உள்ள தாங்கள் தமிழுக்கு ஏதேனும் செய்யும் வேட்கை படைத்தவர். ஆகவே, தாங்கள் அன்னைத் தமிழுக்கு ஆக்கம் சேர்த்துத்தமிழை உயர்த்தித் தானும் உயர்வது உறுதியென 15 ஆண்டுகளுக்கு முன்பே கணித்தேன். பொய்யில் புலவன் கருத்துப் பிழைபடாதன்றோ? அது மெய்யானதறிந்து மகிழ்கிறேன்...''* என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

திரு. சோம.லெ. அவர்களின் கடிதம்

அதேபோல சோம.லெ. அவர்கள் எழுதிய கடிதமும் இங்குக் குறிப்பிடத் தக்க கடிதமாகும். *''டாக்டர் பட்டத்திற்கு உரிய அனைத்துத் தகுதிகளும் பெற்ற பேராசிரியர் பழ.முத்தப்பன் அவர்கட்குப் பாராட்டுவிழாவும், அன்னாருடைய நூல் வெளியீட்டு விழாவும் தங்கள் முயற்சியால் நடைபெறுவது அறிந்து மகிழ்ந்தேன். இத்தகைய விழாக்கள் இளைஞர்களுக்கு ஊக்குவிப்பாகவும், வழிகாட்டியாகவும் பயன்படும். எங்கும் ஆங்கிலக் கல்வி மட்டுமே ஏற்றம் பெற்றுவிட்டது.*

அதன் விளைவாக நம் அடுத்த தலைமுறையினரிடம் தமிழ் படிக்கத் தேவையில்லை என்ற எண்ணத்தை நாம் உருவாக்கிவிட்டோம். இந்த மாயையிலிருந்து ஒரு சிலராவது தப்பித்தாலன்றி, தமிழுக்கும் தமிழர்க்கும் எதிர்காலம் இல்லை. இக்கருத்தை வலியுறுத்தவும் பேராசிரியர் டாக்டர் முத்தப்பன் அவர்கள் மேன்மேலும் ஏற்றங்கள் சிறப்புக்கள் பெறவும், சாதனைகள் பெறவும் இவ்விழா பயன்படட்டும்..'' என்று கவிஞர் பெரி. சிவனடியான் மூலம் வாழ்த்தனுப்பியிருக்கின்றார்.

இவ்வாறாக, மயிலம் கல்லூரியில் திருவாளர்கள் ப.குமாரசாமி ஐயர், காசி தனுக்கோடி, துரை. கார்த்திகேயன் மற்றும் ஆ.சிவலிங்கனார் ஆகிய முதல்வர்களின் கீழ், தமிழ்விரிவுரையாளராக 18 ஆண்டுகள் பணியாற்றிய இவரை,மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராக்க விரும்பியவர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் ஆவார்.

முனைவரை முதல்வராக்கிய தமிழ்

புதுவைப் பல்கலைக் கழக நேர்முகத்தேர்விற்கு இவர் சென்றிருந்தபோது இவரைக்கண்ட செம்மலார் இவரை அழைத்துவந்து, 26.10.1987இல் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராக்கினார். தாம்பயின்ற கல்லூரிக்கே முதல்வராக்கித் தமிழ்ப்பணி ஆற்றிடத் துணைநின்ற அத்தகைமையாளரை இன்றளவும் நினைந்து போற்றும் இயல்பினராக இவர் திகழ்கின்றார்.

காம்பற்ற மலர்களின் கவிதை வாழ்த்து

பதினெட்டு ஆண்டுகள் மயிலம் மண்ணில் இருந்து தமிழ்ப்பணி புரிந்த தமது பேராசிரியரை விட்டுப் பிரிய மனமின்றி,அக்கல்லூரி மாணவமாணவியர் 16.10.1987இல் எழுதி

வழங்கிய விடையளிப்பு மற்றும் வாழ்த்துப் பா பின்வருமாறு அமைகின்றது.

முத்தமிழில் எந்தமக்குப் பயிற்சி நல்கி
முறையாக யாம் தேர்ச்சி பெறுதற் காக
வித்தகராய்ப் பற்பலவாம் நூல்கள் செய்து
வியக்கும்வகை எங்கணுமே சொற்போர் செய்து
நற்றமிழை வளர்க்குமிக் கூடந் தன்னில்
நாங்களெலாம் நயந்துநிதம் போற்றும் வண்ணம்
பத்துடனே எட்டாண்டு பணியைச் செய்த
பழ.முத்தப் பனார் நீங்கள் உயர்த லுற்றீர்

தாம் கற்ற இடத்தினிலே பணியைச் செய்யத்
தகும்வாய்ப்பை எல்லாரும் பெறுதல் இல்லை
ஆம் அந்த அரும்வாய்ப்பை நீங்கள் இன்று
ஆற்றலால் பெற்றுள்ளீர் மகிழ்ச்சி ஐயா
காம்பற்ற மலர்போலே நாங்கள் இங்குக்
கலங்குகிறோம் பிரிதற்காய் எனினும் நீங்கள்
யாம்போற்றப் பல்லாண்டு வாழ வேண்டி
இறைஞ்சுகிறோம் இறைவனையே வாழ்க வாழ்க.

இன்னும் ஒரு வாழ்த்து

இது சமயம் மயிலம் பொம்மபுர ஆதீன இளவரசு சிவ.முருகரிஷபேந்திரன் அவர்கள் எழுதிய வாழ்த்துக் கடிதமும் நினைவுகூரத்தக்கதாகும்.

''பேராசிரியர் மயிலம் பழ.முத்தப்பனார் அவர்களைப் பிரிந்து முதல்வர் முத்தப்பனார் அவர்களை வாழ்த்தி மகிழ்ந்து அமைதி

அடைகிறோம். நல்ல இலக்கிய வாதியை, நல்ல பேராசிரியரை, நல்ல பண்பாளரை, நல்ல நிர்வாகியை, நல்ல பேச்சாளரை மயிலம் இழந்து, சிவபுரி பெற்றிருக்கிறது. மகிழ்ச்சியுடன் தாங்கள் தமிழ்ப் பணி தொடங்கும் இந்த நேரத்தில் நாங்கள் வாழ்த்தக் கடமைப் பட்டுள்ளோம். வாழ்க தங்கள்தமிழ்ப் பணி. வளர்க தங்கள் தமிழ் இலக்கியம்...''

பழ.முத்தப்பனாரின் வாழ்க்கை மூன்று படிநிலைகளைக் கொண்டது எனலாம். மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிய 18 ஆண்டுகள் அவரது தமிழ்ப்பணி சிறப்புற்ற காலம்.பின்னர் 16 ஆண்டுகள் மேலைச்சிவபுரி கணேசர் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் முதல்வராகப் பணியேற்ற காலம் நிர்வாகத்திறனுக்குப் பெரிதும் வாய்ப்பளித்த பொற்காலம் எனலாம்.

III. மேலைச்சிவபுரியில்...

தமிழ் ஞானப் பண்ணையாம் சன்மார்க்க சபை

வள்ளல்பாரி ஆண்ட பறம்புமலைச்சாரலில் சிற்றூராக அமைந்திலங்கும் மேலைச்சிவபுரியில் பழமைநலம் சான்ற சன்மார்க்கசபையின் செவிலிமையில் வளர்ந்து வரும் கல்லூரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியாகும்.

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக என்னும் உயரிய நோக்குடன் 1909ஆம் ஆண்டு வள்ளல்பெருந்தகைகள் வ.பழ. சா.பழநியப்பச் செட்டியார், அண்ணாமலைச் செட்டியார் ஆகியோரால் தோற்றம் பெற்ற சன்மார்க்க சபையின் ஓர் உறுப்பாக அமைவது இக்கல்லூரி. அரசஞ்சண்முகனார், பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் போன்ற சான்றோர்களின் நெறிகாட்டலில் தமிழ்ஞானப் பண்ணையாகச் செழித்து வளர்ந்த கல்லூரி இது. இலங்கை, மலேயா போன்ற அயலகத் தமிழர்கள் வந்து தமிழ்பயின்ற கல்லூரி. ஒரு காலத்தில் இந்தக் கல்லூரியில் பயில வாய்ப்புக் கிட்டாமல் வருந்தியோர் பலராவர்.

கிராமச் சூழலில் குடும்பப் பாங்கோடு தமிழர்தம் வாழ்வியல் நெறியிலிருந்து விலகாத பின்னணியோடு இக்கல்லூரி அமைந்திருப்பது பயிலுவோருக்கு அத்தகு மனநிலையை அளிக்கவல்லது. ஆண்பெண் இருபாலருக்கும் தனித்தனி விடுதிவசதிகள் அமைந்திருப்பது இக்கல்லூரியின் இன்னொரு சிறப்பம்சம்.

ஆனபோதிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கல்விகளின்பால் உள்ள ஈடுபாடு காரணமாகவும் தமிழுக்கு ஏற்பட்ட பின்னடைவு காரணமாகவும் மிகக்குறைந்த மாணவ, மாணவியரே படிக்கும் சூழலுக்கு இக்கல்லூரி ஆனது.

நேற்று வந்த தொடர்பன்று இது

பணியாற்றுதற்காகப் பிறிதொரு தமிழ்க் கல்லூரிக்குப் போனபின்னரும் தாம்பயின்ற மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கல்லூரியை மறவாதவராகவும் அக்கல்லூரியோடு பலநிலைகளிலும் தொடர்புடையவராகவும் பழ.முத்தப்பனார் இருந்திருக்கின்றார். தமது திருமணத்திற்கு அக்கல்லூரியின் பேராசிரியரை அழைத்து வாழ்த்துரைக்கச் செய்திருக்கின்றார். மயிலத்தில் பணியாற்றிய காலத்திலும் மேலைச்சிவபுரிக் கல்லூரிக்குத் தம்மாலான உதவிகளை ஆற்றிவந்திருக்கின்றார். குறிப்பாக, இக்கல்லூரியின் மாணவர் சேர்க்கைக்கு அன்னாரது உதவியினை நாடியிருக்கின்றனர்.

17.07.1978 நாளிட்ட கடிதமொன்றில் மேலைச்சிவபுரிக் கல்லூரிப் பேராசிரியர் திரு. மு.கோவிந்தராசன் அவர்கள் பழ.முத்தப்பனாருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதியிருக்கின்றார். *''தங்கள் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை எப்படி இருக்கிறது. அங்கே தங்கள் கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்கு மேலாக மாணவர்கள் வந்தால் மேலைச்சிவபுரிக்கு அனுப்பி வைத்தால் நல்லது. இங்குக் கல்லூரி நிறுவனம் அரசினர் உதவி பெற முடியாதவர்களுக்கு மாதாமாதம் முப்பது ரூபாய் உதவித் தொகை அளிப்பதாகவும் முடிவு செய்துள்ளது. அந்த உதவி பெறும் தகுதியுடைய மாணவர்களை அனுப்பி வைக்க இயன்றால் செய்யவும்...''* என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆக, திரு.சோம.லெ.அவர்கள் குறிப்பிட்டதையும், பேரா. மு.கோ. அவர்கள் குறிப்பிட்டதையும் வைத்துப் பார்க்கின்றபோது அக்காலத் தமிழ்ப்படிப்பின் நிலை தெற்றெனை விளங்கும். இவற்றுக்கு மத்தியில் இக்கல்லூரியின் ஆட்சிக் குழுத் தலைவராக இருந்து இக்கல்லூரியை மேம்படுத்த விரும்பிய செம்மல் வ.சுப. அவர்கள்

செய்த அரும்பணிகள் பலப்பல. அவர்களது நன்முயற்சிகளுள் ஒன்றாக, பழ. முத்தப்பனாரை மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக்கு முதல்வராக்கியது அமையும்.

வாழ்த்தும் வரவேற்பும்

செம்மலாரின் அரவணைப்பில் இக்கல்லூரியின் முதல்வராகப் பணியேற்ற பழ. முத்தப்பனாரைப் பல தமிழ்ச் சான்றோர்கள் பாராட்டியும் வாழ்த்தியும் மகிழ்ந்தனர். அது சமயம் இக்கல்லூரியின் முன்னை முதல்வர் பேராசிரியர் திரு. சி. செல்வத்தாண்டவன் அவர்கள் 7.11.1987இல் எழுதிய கடிதமாவது.

''சன்மார்க்க சபைப் பெரும்புலவரும் பண்டிதமணிஅவர்களின் வழிநின்று சபையையும் கல்வி நிறுவனங்களையும் உரிய காலத்தில் உரிய செயல் செய்து கண்மணிபோல் காத்து வரும் முன்னைத் துணை வேந்தரும் ஆகிய செம்மல் வ.சுப.மா. அவர்கள் வாயிலாகவும், திட்டமிட்டு எதனையும் சிறப்பாகச் செய்து வரும் அன்பு, அறிவு, அடக்கத்தின் வடிவம் திரு. பழநியப்ப செட்டியார் வாயிலாகவும் நீங்கள் நியமனம் செய்யவிருப்பது அறிந்த ஞான்றே பெரிதுவந்தேன். வாழ்க. நயத்தந்தை, மகாமகோபாத்தியாய பண்டிதமணி அவர்களை மனத்திருத்தி, இறைவனை வழிபட்டுத் தொண்டு மனத்துடன் ஆசிரியப்பணி புரியுங்கள். எல்லாம் சிறப்பாக அமையும். வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப் புகழுடன் வாழ்வீர்கள்...'' என்று உளப்பூர்வமாக அவர் எழுதிய வாழ்த்து அவரைப்பல நிலைகளில் உயர்த்தியது எனலாம்.

ஈன்ற பொழுதிற்பெரிதுவக்கும்...

இதேசமயம் அன்னாரது புதுவயலில் பிறந்த அண்டை வீட்டுச் சகோதரியார் பழ. உமையாள் அவர்கள் அன்பு பாராட்டி இவர்க்கு எழுதிய கடிதமும் இங்குக் கவனிக்கத் தக்கது.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் என்ற வள்ளுவரின் வாக்கை மெய்ப்பிக்க ஈன்றோர் இவ்வுலகத்தை விட்டு விண்ணுலகு எய்திவிட்டாரேயாயினும் அந்த நிலையில் இருந்து பூரிப்படைந்தேன். வள்ளுவரின் வாக்கு எவ்வளவு உண்மையானது என்றும் உணர்ந்தேன்.

தன்னைப் புலவனாய் வளர்த்துவிட்ட தாயகத்திற்கு வளர்ந்து புலமைசால் பெற்பற்ற அறிவால், தன்னை வளர்த்து தாய்க்குத் தலைமகனாய் (முதல்வர்) சென்றிருப்பது அந்தத் தாய்க்கு எவ்வளவு பெருமை.

மகனாய் நின்று தாயின் கனவுகளை நனவாக்கி மேலும் சீரிய நிலையில் சிறப்புப் பெற்ற கல்விக்கூடமாக மாற்றுவதோடு ஆண்டு தோறும் உருவாக்கும் தமிழ்த்தாயின் குழந்தைகளை அதிக அளவில் பண்பட்ட முத்துக்களாய் உருவாக்க வேண்டும் என்ற உறுதியை மனதில் கொண்டு சீரிய முறையில் செயலாற்ற வேண்டுகிறேன். பணம் என்னும் பேய் பிடித்தொழுகாது பண்பு என்னும் சீரிய குணத்துடன் யாருக்கும் தலைவணங்காது, கர்வமின்றி எல்லாருக்கும் நன்றால் பணிதல் என்னும் வாக்கிற்கிணங்க தன்னால் செய்ய முடிந்த தமிழ்த் தொண்டைச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் மாணவர்களுக்கு உணர்த்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். தன் பணி சிறக்கச் சிறக்க உன் மழலைச் செல்வங்களின் நிலை நாளுக்கு நாள் உயரும் ...''

பயின்ற கல்லூரியில் மேற் கொண்ட பணிகள்

தாம் பயின்ற கல்லூரியில் முதல்வராக உள்நுழைந்தபோது பலப்பல எண்ணங்கள். கனவுகள்.. வட்டமிட ஆங்கிருந்த வந்து பெருமை சேர்த்த சான்றோர்களையெல்லாம் நினைந்து நெகிழுதல் இவருக்கு இயல்பாக இருந்தது.

சபையின் உள்ளே தோன்றாத் துணையாக எழுந்தருளியிருக்கும் கணேசப் பெருமானை வணங்காது எக்காரியத்தையும் இவர்

தொடங்குதல் கிடையாது. இவரது வருகைக்குப் பின்னர் இவரது உழைப்பாலும் நிர்வாகத்தாரின் முயற்சியாலும் மெல்லமெல்ல மாணவ, மாணவியர் சேர்க்கை கூடத் தொடங்கியது.

அக்காலத்தே வாய்ப்பு நேரும் போதெல்லாம் செம்மல் வ.சுப.மா. வகுப்பறைகளுக்கு வருவார்கள். மாணவ, மாணவியரோடு கலந்துரையாடுவார்கள். தமிழில் ஒலிப் பிழை, மொழிப்பிழை இல்லாமல் பயன்படுத்தப் பயிற்சிபெறல் அவசியம் என்று வலியுறுத்துவார்கள்.

சுமார் பதினைந்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் இருந்த சூழல் மாறி நாங்கள் முதலாமாண்டில் நாற்பதின்மராக அமைந்தோம். அதுசமயம், முதல்வரது குடும்பமும் மேலைச்சிவபுரிக்கு வந்து விட்டது. வ.சுப.மா. அவர்களது இல்லத்திலேயே ஒரு பகுதியில் இவர்களது வாசம்.

பன்னிரண்டாம் வகுப்பு முடித்திருந்த முதல்வரின் புதல்வன் மு.பழனியப்பன் தந்தையாரைப் போலவே தமிழின் பால் பற்றுக் கொண்டு இக்கல்லூரியின் மாணாக்கராக விண்ணப்பித்துவிடப் பெரிதும் தயங்கினார் முதல்வர். தன்னை அடுத்துத்தம் குடும்பத்தில் ஒருவன் அதிலும் தன் மகன் தமிழ் படிக்க வந்து விட்ட மகிழ்வு ஒருபுறம் இருந்தாலும், தான் முதல்வராகப் பணியாற்றும் கல்லூரியில் தம் மகன் பயிலுதல் எவ்வாறு இருக்கும் என்றெல்லாம் ஒரு கணம் கவலைப்பட்டபோதிலும் அதனை வரவேற்றார்.

மாணவ, மாணவியரின் இலக்கிய மேம்பாட்டிற்கு உதவும் நன்னெறிக் கூட்டங்கள் பொது அறிவிப்புக் கூட்டங்களுக்காகச் சன்மார்க்க சபைக்குள் குழுமும் போதெல்லாம் அங்கிருக்கும் பலவிதமான வரவேற்புப் பத்திரங்கள் அதன் பழமைச் சிறப்பை உணர்த்தும். சபைக்குப் பெருமை சேர்த்த சான்றோர்களின் புகைப்படங்கள் வரலாறு கூறும். அந்த இடத்தில் நின்று பேசும் போதெல்லாம் ஒருவித சிலிர்ப்பு உண்டாகும்.

ஒரு நிகழ்வு

ஒருமுறை திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய இளையபாரத நிகழ்விற்கான ஒத்திகைக் கூட்டத்தில் முதல்வர் பங்கேற்றபோது, அவருடன், எல்லாரது வருகைக்காகவும் காத்திருந்த கணம்... அந்தச் சபையிலிருந்த நிழற்படங்கள், சான்றுப்பத்திரங்களையெல்லாம் ஒருமுறை பார்வையைச் சுழலவிட்டபடி அவர் சொன்னார்.. எத்தனை தமிழ்ச் சான்றோர்கள் இருந்த இடம் பயின்ற இடம்... என்று சிலிர்ப்போடு கண்கள் வியப்பில் மலரச் சொன்ன விதமும் குரலும் அவற்றின் வழியாக வெளிப்பட்ட கல்லூரிப்பற்றும் அதன்மீதான பக்தியும் இன்னும் என்னுள் ஆழமாகப் பதிந்தவை. அது எத்துணை உண்மை.

கம்பீரமாய் முழங்கும் மணிக்குரல்

"உதிரத்தின்உறவோடு உலகத்தில் எனையீன்று
உறவாடவிட்ட தாயே
முதிராத மொழியான முத்தமிழை முறையாக நான்பேச
முன்னின்று காப்பாய் நீயே
உள்ளத்தின் உள்ளூறும் அன்போடு எனைவாழ்த்தி
உயரத்தில் ஏற்று தாயே
நற்றாயே இலக்குமியே எங்கேனும் பிழையென்றால்
நீ பொறுப்பாய் இங்கு தாயே"...

என்று தம்மை ஈன்ற தாயை வணங்கிப் பின்னர் தம் கணீர்க் குரலில் இவர் முழங்கும் உரை சன்மார்க்க சபை முழுக்க எதிரொலிக்கும். அநேகமாகக் குருகுலத்தை நினைவூட்டும் வண்ணம் மாணவ, மாணவியரோடு உள்ளூர்ப் பெரியோர்களும் அச்சபையின் உள்ளரங்கில் ஜமக்காள விரிப்பில் அமர்ந்து தமிழ்கேட்கும் பாங்கு மறக்கற்பாலது. ஒவ்வொரு விழாவினைக் குறித்தும் அறிவிப்புப் பலகையில் எழுதி வாசலில்

வைக்கப் பெற்று விழா நடக்கும். முதல்வரைக் காண அப்பகுதிக்கு வரும் பேச்சாளர்கள் தமிழறிஞர்களையெல்லாம் வரவேற்கும் முதல்வர் திடீர்க் கூட்டங்களை நடத்தி அவர்களது உரைகளைக் கேட்க வைப்பார். முனைவர் சுப. அண்ணாமலை, சித்தாந்தச் செம்மல். முரு.பழ. ரத்தினஞ்செட்டியார் போன்ற தமிழறிஞர்கள் அவ்வாறு வந்து உரையாற்றிய நிகழ்வுகள் மறக் கொணாதவை. அதேபோல, கல்லூரியின் முன்னை மாணாக்கர்களான தமிழ்ச் சான்றேரர்களைக் கொண்டு சிறப்பு வகுப்புக்களை நடத்தியிருக்கின்றார். அத்தோடு, நவீனத் தமிழ்ப்படைப்பாளிகளை வரவேற்று மாணவ, மாணவியர்க்கு அறிமுகப்படுத்துவதிலும் இவர் தலைநின்றார். அவ்வகையில் இக்கல்லூரிக்கு முதன்முதலில் வருகை தந்த முற்போக்குப் படைப்பாளி தோழர் தனுஷ்கோடி ராமசாமி ஆவார். முதல்வர் மயிலத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தே பழகிய தோழர் அவர். மாலை விழா முடிந்து முதல்வர் இல்லத்தில் விருந்து.அது சமயம் எழுத்தாளர் சந்திரகாந்தன் உள்ளிட்ட நண்பர்களும் வந்திருந்தனர்.



வெறுமனே வகுப்பறைக் கல்வியாகத் தமிழ் வகுப்புகள் நின்றுவிடக் கூடாது என்ற ஆர்வம் கொண்ட முதல்வர் சிறப்புமிகு படைப்பாக்கப் பயிலரங்குகளை நடத்தியிருக்கின்றார். அவ்வகையில் ஞானபீடப் பரிசு பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள் தொடங்கிப் பல படைப்பாளிகள் வருகை தந்து உரையாற்றியதோடு இலக்கியப் பயிற்சிகளையும் நவீனத் தமிழ்ப் பரிச்சயத்தையும் வழங்கியிருக்கின்றனர். கவிஞர் கந்தர்வன், பழமலய், இராஜமார்த்தாண்டன், விக்கிரமாதித்தன் நம்பி முதலான பலர் குறிக்கத்

தக்கவர்களாவர். இத்தகு முயற்சிகளுக்குத் துணை நின்றவர்களுள் ஒருவர் கல்லூரி நூலகரும் விமர்சகருமான முனைவர் ந.முருகேச பாண்டியன் ஆவார்.

தமிழால் முடியும்

"தமிழ் படிப்பது கேவலமன்று. வேலை வாய்ப்புக்குரிய கல்வியாக இது நிச்சயம் இருக்கும் என்றெல்லாம் மக்களிடத்தில் சொல்லி மேலைச்சிவபுரியில் இப்படி ஒரு கல்லூரி இருக்கின்றது" என்பதனைப் பொதுவில் அறிவிக்கப் பலவிதமான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டவர் முதல்வர். காலை தொடங்கி மாலை வரை கல்லூரிப் பணி. மாலைக்குப் பின்னர் எங்கேனும் இலக்கியக் கூட்டம் என்று சென்றுவிட்டுப் பொழுது விடிவதற்குள் மேலைச்சிவபுரிக்கு வந்துவிடுவது இவர் வழக்கம். காலை எழுந்தவுடன் ஒரு நடை கல்லூரிக்கு வந்து ஒரு பார்வை செலுத்தியபிறகே அவரது காலைப் பணிகள் தொடங்கும்.

என்னையும் ஒருவனாக்கி...

முதல்ஆண்டு மாணவனாக உள்ளே நுழைந்த என்னை அவர் ஒரு பட்டிமன்றப் பேச்சாளராக அடையாளம் கண்டு பாலக்குறிச்சிப் பள்ளிக்கு அழைத்துப் போய்ப் பேச வைத்ததை இப்போது நினைத்தாலும் ஆச்சரியம். திருக்குறள் நெறியில் தலைநிற்பது கம்பராமாயணமா? சிலப்பதிகாரமா? என்பது தலைப்பு. கம்பராமாயண அணியில் நான். அதற்காக வள்ளுவத்தையும் கம்பனையும் வைத்துக் கொண்டு நாட்கணக்காக நான் பார்த்த பார்வை இப்போதும் பயன் தரத்தக்கது. ஆயினும் அன்று நான்கு நிமிடங்களே பேசும் நிலை. கணீரென்ற குரலில் அத்துணை பேரையும் தன் கவனத்தின் கீழ்க் கொணர்ந்து கம்பனையும் இளங்கோவையும் வள்ளுவத்தராசில் வைத்துத் தீர்ப்பு வழங்கிய விதமும் அத்துணைப் பேச்சாளர்களையும்

வேன் (Van)வைத்து அழைத்துச் சென்று திரும்பக் கொணர்ந்து கல்லூரிநேரத்தில் விட்ட ஒழுங்கும் பசுமையான நினைவுகள். நிச்சயம் அப்பள்ளி மாணவர்கள் கல்லூரிப் படிப்பிற்கு இங்கு வருவர் என்ற நம்பிக்கை வீண் போகாமல் பலர் வரும் வண்ணம் அன்று அவரது பேச்சு அமைந்திருந்தது.அப்படித்தான், அப்பகுதிகளில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளும்.

ஊர்கள் தோறும்

அவ்வண்ணமே,மேலைச்சிவபுரிப்பகுதிகளில் நடைபெறும் திருவிழாக்களில் எல்லாம் முதல்வர் தலைமையில் பட்டிமன்றம் நடக்கும். இருபது நிமிடங்களுக்குக் குறையாமல் கல்லூரியின் பெருமையைப் பேசுவார். அதன் தரத்தை நிலைநிறுத்துவது போல மாணவர்களாகிய எங்களைப் பேச வைப்பார். பெரும்பாலும் இலக்கியத் தலைப்புகளாகவே இருக்கும். கோவில் விழாக்கள் என்றால் அது பெரியபுராணத் தலைப்பைக் கொண்டதாக அமையும். அந்தப் பகுதி விழாக்களில் பங்கேற்கின்றபோது அப்பகுதி மாணவ, மாணவியரின் இல்லங்களுக்குச் செல்வது வழக்கம். சாதி, மதபேதம் பாராது அவர்களது உபசரிப்பை ஏற்று விருந்துண்டு உறவு பேணும் அவரது பாங்கு எளிமையானது. அருமையானது. அடுத்தடுத்த விழாக்களில் இவர் பங்கேற்கின்றபோதெல்லாம் அவர்கள் தமது உறவினரைப் பார்க்கின்ற மகிழ்வு கொள்வார்கள். அப்படியான பல நிகழ்வுகள் கல்லூரியை அடுத்துள்ள கிராமங்களில், நகரங்களில் நடைபெறுவது வழக்கம்.

ஒரு நிகழ்வு

எதிலும் முற்போக்காக விளங்கும் எமது ஊரான கிருங்காக்கோட்டையில் இவரை நடுவராகக் கொண்டு ஒரு பட்டிமன்றம் ஏற்பாடு செய்தாயிற்று. விழாத் தொடங்கும் சமயத்தில்

ஒரு சின்னச் சலசலப்பு. நடுவர் எழுந்து பேசத் தொடங்கியபோது நிறுத்து என்ற சப்தம். பெரியவர்கள் எழுந்து அமைதிப்படுத்துவதற்கு முன்னர் கூட்டம் பிளவுற்ற நிலை. எதற்கும் தளராமல் நின்ற நிலையிலிருந்து இவர் ஆற்றிய உரை சிறப்புமிக்கது. அது மட்டுமல்ல. யார் நிறுத்தச் சொல்லிச் சத்தமிட்டாரோ அவரே அடுத்த ஆண்டு முதல் அமைப்பாளராகி பத்து நாட்கள் விழா நடத்தும்படியானது தான் சிறப்பு. இப்படியாகப் பலநிகழ்வுகள்...

கல்விப் பணியே கலைப்பணியாய்

அப்போதெல்லாம் காலையில் வகுப்புக்குச் செல்வோம். மாலையில் எங்கேனும் நிகழ்ச்சி இருக்கும். அதனை எமது கல்லூரி வளர்ச்சிக்கான அறப்பணிகள் என்றே செய்திருக்கின்றோம்.

மாவட்ட, பல்கலைக் கழக அளவிலான அனைத்துப் போட்டிகளுக்கும் கல்லூரி சார்பாகப் பங்கேற்போம். அத்தகு சமயங்களில் எல்லாம் நடுவுநிலை பேணப் பொதுப் போட்டி நடத்தி, அதன்மூலம் உரியவர்களைத் தெரிவு செய்வதில் முதல்வர் கவனமாக் இருப்பார்.

தனித்துவமிக்க ஆளுமை

அகன்றதொரு நெற்றியிலே திருநீறு
அகமினிக்க இவர் பேசும் செந்தமிழு
அழகு தமிழிவரிடத்தே கொஞ்சிவரும்
அன்னை தமிழ்இவர் வாயில் மணக்க வரும்

வாதுக்கழைப்போரை கையாலன்றி
வன் தமிழில் துணையாலே வென்றிடுவார்
வண்ணமலர் சரமெடுத்தே தமிழை என்றும்
வாயார வாழ்த்தி என்றும் சிறப்பாரே

என்று விழிமாநகர் வ.வளவன் என்பார் பாடியது போலத் திகழ்பவர் பழ.முத்தப்பனார்.

கல்லூரியில் வகுப்பறை தவிர்ந்த பொழுதுகளிலும் பயில்வோர் மீது அக்கறை கொண்டவர் இவர். விடுதி மாணவ,மாணவியரிடத்தே காட்டும் அக்கறையில் கிஞ்சிற்றும் குறையாமல் அன்றாடம் வந்து திரும்பும் பயில்வோருடத்தும் அன்பு பாராட்டுவார்.மதிய உணவு இடைவேளைகளில் வகுப்பறைக்கு வந்து வெளியூர் மாணவர்களிடம் உரையாடுவார். நலம் விசாரிப்பார். தேவைகளை அறிந்து உதவுவார். கல்விப் பணம் கட்டமுடியாத நிலையிலிருப்போர்க்குத் தமது பையிலிருந்து எடுத்துக் கொடுப்பார். அம்மாணவராக வந்து திருப்பிக் கொடுத்தால் தான் உண்டு. பெற்றோர்களிடம் பெற்று அதனைத் தராமல் வேறுவழிகளில் செலவு செய்ய முயல்பவர்களிடம் கேட்டுப் பெற்றுவிடுவார். தனக்குச் சரியென்று பட்டதை உரத்து முழங்கி அனைவரும் கேட்க வேண்டும் என்று கட்டளையிடும் இவர் அது தவறு என உணர்ந்து விட்டாரெனில் உடனே மாற்றிவிடுகின்ற வழக்கமும் உள்ளவர்.

பாராட்டு என்றால் மனந்திறந்து பாராட்டுவார். அதேசமயம் குறை கண்டு விட்டாலோ திட்டும் அப்படித்தான் இருக்கும். ஒழுங்கு, கட்டுப்பாடு என்று உரத்து முழங்கும் போதெல்லாம் கல்லூரிக்குரிய ஜாலிவேண்டும் என்று நினைப்பவர்க்குத் தண்டனையாக இருக்கும். இது என்ன தொடக்கப் பள்ளியா? என்று முணுமுணுத்தவர்கள் உண்டு. அது குறித்து வகுப்பறையிலேயே விளக்கம் தருவார். இது நகரம் இல்லை. கிராமம். சுற்றிலும் மனிதர்கள்.முகந்தெரிந்த மனிதர்கள்.. எனவே, அமைதியாக இருப்பது கல்லூரிக்குச் சிறப்பு.. என்பார். வேண்டாதாரும் விரும்பிக் கேட்கும் வண்ணம் இவரது உரையும் வகுப்பும் அமைந்திருக்கும் என்பது அனைவரும் உணர்ந்த உண்மை.

சில இக்கட்டான சூழல்களுக்கு இவர் ஆளானபோது உடனிற்க நேர்ந்தது. விடாமுயற்சி, தன்னம்பிக்கை, இடைவிடா உழைப்பு ஆகிய

குணங்களால் தம்மைத் தூக்கி நிறுத்திக் கொண்டவர் இவர். சந்தர்ப்ப வசத்தால் இவரது புதல்வன் மு.பழனியப்பனும் நானும், உடன் பயின்ற சிங்கமுத்துவும் இணைந்து பழக வாய்ப்பு நேர்ந்தது அதிசயம். பலரது பார்வைக்கும் உறுத்தலுக்கும் ஆளாக நேரும்படியான வாய்ப்புகள் அதிகம். சாதாரண நிலையில் ஒருபோதும் இருக்க முடியாத நெருக்கடி இருக்கும். முதல்வரின் மகன். அவருக்கு நெருக்கமானவர்கள் என்பதான முத்திரைக்கு ஆட்பட்டு நாங்கள் பட்ட சிரமங்களே அதிகம்.

கல்லூரி விளம்பரத்திற்காகச் சுவரொட்டிகள் ஒட்டுவது. சமூகத்தொண்டு புரிவது. இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்ற செயல்களில் எங்களது சொந்த செலவில் இறங்குவோம். மாவட்ட, பல்கலைக் கழக, மாநில அளவில் நடைபெறும் அனைத்து இலக்கியப் போட்டிகளிலும் பங்கேற்கச் செல்வோம். ஏனைய கல்லூரி மாணவ, மாணவியர்க்கெல்லாம் அவர்கள் கல்லூரிகள் செலவழிக்க, நாங்கள் எங்கள் சொந்தச் செலவில் அல்லது கடன் வாங்கிச் சென்று பங்கேற்போம். நிச்சயம் பரிசுகளை வெல்வோம். அத்தொகையைக் கொண்டு கடனை அடைப்போம். பெயர் கல்லூரிக்கு. பரிசு எமக்கு.

இப்படித் தொடங்கி மாநில அளவில் கல்லூரிப் பெயரினை நிறுவ வாய்ப்பாய் அமைந்தன, சென்னைக் கம்பன் கழக இலக்கியப் போட்டிகள். ஏறத்தாழ ஆறு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வெள்ளிச் சுழல் கோப்பைகளை வென்று பரிசு பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை தேடித் தரத் துணைநின்றவர் முதல்வர்.

இவை தவிர, பொதுநிகழ்வுகளில் பங்கேற்றுவழிச் செலவுக்கெனப் பணம் பெறுகின்றபோது அவர் சொல்வார்.. அத்தொகையின் சிறுபகுதியையேனும் கொண்டு அந்நிகழ்வின் நினைவாக நமக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிச் சேமிக்க வேண்டும்.. என்று.அவ்வாறே அவரும் செய்வார்.தமிழ் படித்துவிட்டுச் சும்மா இருக்கக் கூடாது. எதாவது செய்யவேண்டும். கட்டுரைகள் எழுத வேண்டும். பேச்சுக்குப் போக வேண்டும் என்பார். அவரே முன்னின்று பலரை ஊக்குவிப்பார்.

அற்புதத் துணைநலம்

இப்படியெல்லாம் சொல்லுகின்றபோது மறக்காமல் இவரோடு நாம் நினைந்து பாராட்ட வேண்டிய ஒருவர் இவரது வாழ்க்கைத் துணைவியார் திருமதி அழகம்மை ஆவார். முதல்வரது அன்பில், செயல்பாட்டில் அவரவர் மனநிலைக்கும் அனுபவத்திற்கும் ஏற்பக் குறை காணலாம். ஆனால் எந்த நிலையிலும் குறைகாணமுடியாத தாய்மை உள்ளம் அழகம்மை ஆச்சியின் உள்ளமாகும்.

மேலைச்சிவபுரிக்கு வந்தநாள் முதலாய் இக்கல்லூரி மாணவ, மாணவியர்பால் இவர் காட்டிய அக்கறையும் பரிவும் அம்மாணவ, மாணவியரை விடவும் நன்குணர்ந்தவர்கள் அவர்களைப் பெற்றோர் என்பதனைப் பலநிலைகளிலிருந்து கண்டிருக்கின்றேன். எந்த நேரமானாலும் எவர் சென்றாலும் எந்தவித மாறுபாடுமில்லாமல் அன்பு காட்டி உணவு பரிமாறும் அன்னபூரணித்தாய் இவர். அநேகமாகக் கல்லூரி விழாவிற்கு வரும் எந்தவொரு சிறப்பு விருந்தினரும் இவரது விருந்துக்கு வராமல் சென்றதேயில்லை. அவரவர் சுவையறிந்து விருந்து படைப்பதும் அன்பு பாராட்டுவதும் இவரது இயல்பு.

முன்வினைத் தொடர்போ என்னவோ, கல்லூரியில் சேர்ந்தபோதிருந்தே இவரது தாய்மையன்பு எனக்குக் கிட்டி யிருக்கின்றது. மதிய வேளைகளில் உணவுண்ண வீட்டிலிருந்து கொண்டு வந்தாலும் அவர்களோடு போய் அவர்களது இல்லத்தில்தான் நான் போய் உண்ண வேண்டும். சிலசமயங்களில் போகமுடியாத சந்தர்ப்பம் நேருகின்றபோது மதிய உணவுக்குப் போய்த் திரும்பும் முதல்வர் நேரே வகுப்புக்கு வந்து, "ஏன் சாப்பிட வர்லே.. அம்மா உனக்காகக் காத்துக்கிட்டிருக்கா போப்பா!" என்பார்.. நான் போன பிறகே அன்பான திட்டுதலோடு சாப்பாடு நடக்கும். நான் மட்டுமல்ல என்னோடு யார் வந்தாலும் உண்டு. பொதுவாக எல்லா மாணவ, மாணவரிடத்திலும் அன்பு பாராட்டும் பண்பு அவருக்கு உண்டு. ஒவ்வொரு மாணவ, மாணவியரின் படிப்பிலும் முதல்வரைப்போலவே

இவரும் அக்கறை கொண்டு திட்டுவார். உற்சாகப் படுத்துவார். அவர்களது திட்டக் கட்டுரை மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை இவரே வாங்கித் தட்டச்சு செய்து தருவார். பிழைபட எழுதியிருந்தாலும் இவரே திருத்திச் சரிசெய்து தட்டச்சில் தருவார். பல ஏழைமாணவ, மாணவியர்களிடம் அவர் அதற்காகப் பணம் வாங்கியதேயில்லை.

கல்லூரியில் முதுகலை வகுப்பு தொடங்கப் பெற்றபோது மாணவ, மாணவியர் சேர்க்கை இல்லை. உடனே மயிலம் கல்லூரிக்குத் தொடர்பு கொண்டு அங்கு இளங்கலை முடித்த மாணவர்களை வரவழைத்துத் தம் இல்லத்தில் வைத்து உணவளித்து, தேர்வுக் கட்டணம் கட்டி அவர்களைப் படிக்க வைத்த புண்ணியம் இவர்களுக்கு உண்டு. கூடவே, அச்சகம் தொடர்பான அவர்களது பணிகளில் கைபழகிக் கொடுக்கவும் செய்வார்கள். அவர்களெல்லாம் இன்று பல கல்லூரிகளில் பள்ளிகளில் ஆசிரியர்களாக இருப்பதோடு காவல்துறை முதலான பிறதுறை அதிகாரிகளாகவும் இருந்து வருகின்றார்கள்.

முதுகலை வகுப்புத் தொடங்கிய கையோடு வியாழவட்டக் கருத்தரங்கைத் தொடங்கி அதனைப் பண்டிதமணி ஆய்வரங்கமாக வளர்த்த பெருமை இம்முதல்வருக்கு உண்டு. அதேபோல பழைய மாணவர் கழகத்தைக் கூட்டி இவர் செய்த பல பணிகள் கல்லூரியின் வளர்ச்சிக்கும் பயில்வோர் நலனுக்கும் பெரிதும் துணை நின்றன எனலாம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பல நிகழ்வுகள் இவர் காலத்தில் இங்கு அரங்கேறின. குறிப்பாகப் பட்டமளிப்பு விழா. ஆண்டுவிழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப் பெறும் அவ்விழாவினை நடத்த அரங்கம் இல்லாத சூழல். அதற்காக மிகப் பிரம்மாண்டமான கொட்டகையைக் கல்லூரியின் முன்னர் எழுப்பிவிடுவார். அதன் அலங்காரப் பணிகள் அற்புதமாக நடக்கும். விடிய விடிய முதல்வர் மாணவ, மாணவியரோடு அனைத்துப் பணிகளிலும் ஈடுபடுவார். இருக்கைகளை அமைத்தல். மேடை இருக்கைகளை அமைத்தல், பேனர்வைத்தல், சரிபார்த்தல் என

அனைத்திலும் நேர்த்தி இருக்கும். எல்லாம் புதுவயல் ஸ்ரீ சரசுவதிசங்கத்தில் செய்த பழக்க நேர்த்தி. நான் இக்கல்லூரியில் பயின்று மாலைநேரக் கல்லூரியில் பணிபுரிந்த காலம் வரைக்கும் இவ்விழாக்காலத்தில் வாசலில் மிகப் பிரமாண்டமாகக் கோலம் போடுவது எனக்கான பணியாகும்.

இதுபோல் அவரவர்க்கான பணிகளை இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் என்பதனை மிகச்சிறப்பாகக் கடைப்பிடிப்பது இவரது இயல்பு. அதனால்தான் இவர் நிர்வாகத்தில் இத்துணை சிறப்பாக உயர முடிந்தது எனலாம். இவரது அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவளித்த நிர்வாகத்தினரின் பண்பை இவர் எப்போதும் மறப்பதில்லை.

இவரை மயிலத்திலிருந்து இங்கு அழைத்து வந்து முதல்வராக்கிய செம்மல் வ.சுப.மா. அவர்களைத் தொடர்ந்து இதன் தலைமைப் பொறுப்பேற்ற முனைவர் தமிழண்ணல் காலத்தில் இக்கல்லூரியில் நிகழ்ந்த வளர்ச்சிப் பணிகள் பலப்பல.

மாலைநேரக் கல்லூரி, நாட்டுநலப்பணித் திட்ட விரிவாக்கம், முத்துவிழாக்கட்டம், நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், நூற்றாண்டு விழாக்கள் என்று பல்வேறு வளர்நிகழ்வுகளை இங்கு அரங்கேற்றி வெற்றி கண்டவர்.

பல்வேறு விமர்சனங்களுக்கு இடையிலும், போற்றுதல் தூற்றுதலுக்கு இடையிலும் தன்னாலான அனைத்துப் பணிகளையும் கல்லூரி மேம்பாட்டிற்கு இவர் ஆற்றியதன் காரணமாகவே இவரது மக்களும் இவரது இல்லத்தாரும் இனிது வாழ்கின்றனர் என்றால் மிகையன்று. இத்துணை பணிகளுக் கிடையிலும் தான் கல்லூரியில் இருந்து ஓய்வு பெறுகின்ற காலத்து மிகப் பெரிய அலங்கார வளைவினை அமைத்து அவர் போற்றி மகிழும் குன்றக்குடி ஆதீனக் குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களைக் கொண்டு திறந்து வைத்து மகிழ்ந்தார். முன்னாள், அந்நாள்



மாணவ, மாணவியர் மற்றும் அவர்தம் பெற்றோர் பொதுமக்கள் அறிஞர் குழாம் எனத் திரண்ட கூட்டம் பார்த்து இடிமின்னலோடு வந்த மழை விலகி நின்று அமைதி காத்தது அதிசயம்.

எழுத எழுத இன்னும் பலப்பலப் பக்கங்களில் விரியும் இவரது கல்லூரிப் பணியில் தடம்பதித்த சுவடுகளைச் சுருக்கமாக, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி ஆண்டு மலர் 2003 இல் வெளியான இவரது வாசகம் கொண்டே காணலாம்...

கல்லூரிப்பணியில் தடம் பதித்த சுவடுகள்

" 1963/67 முதல் தமிழ் வித்துவான் வகுப்பில் தமிழ் மாணவனாக இக்கல்லூரியில் பயின்ற காலம் என் வாழ்வில் நினைவு கொள்ளத் தக்கதாகும். கல்வி பயின்ற இக்கல்லூரியில் 27. 10. 1987 முதல்வராகப் பணியேற்க செம்மல் வ. சுப. மாணிக்கனார் அவர்களால் வாய்ப்புக் கிட்டியது. அன்று காலை என் அத்தான் கயி. ராமநாதன் செட்டியார் அவர்களோடு கல்லூரியில் நுழைந்தேன். அன்றையச் செயலர் மதிப்பிற்குரிய வ. பழ. சா. பழனியப்பச் செட்டியார் அவர்களும், செம்மல் அவர்களும் இன்முகத்தோடு வரவேற்று முதல்வர் பொறுப்பினை அளித்தார்கள். அன்று முதல் நடைபெறும் இந்நாள்வரை என்னை உருவாக்கிய இக்கலைக்கோயில் முன்னேற்றத்தில் பெரிதும் கவனம் செலுத்தினேன். கல்லூரியில்

பணியாற்றும் ஆசிரியர்களும், அலுவலர்களும் உற்றுழி உதவியதை என்றும் மறக்க இயலாது.

கல்லூரியில் பணியில் சேர்ந்த பொழுது மிகக்குறைந்த மாணவியரே பயின்றனர். எனவே, மாணவியர் எண்ணிக்கையை உயர்த்திட கல்லூரி விடுதியில் தனிக்கவனம் செலுத்தப் பெற்றது. பெண்கள் விடுதிக்கென தனியே ஒரு காப்பாளர் நியமனம் செய்யப்பெற்று சிவகங்கை சங்கமுத்து அம்மையார் அவர்கள் சுமார் 12 ஆண்டுகாலம் மிகச்சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மாணவியர் அதிகம் பயில அவர்களின் மேற்பார்வை மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

அதுபோல மாணவர்கள் காலம் தவறாமை, இருபாலர் பயில்வதால் அவர்தம் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தப் பெற்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றன. பெற்றோர்கள் சந்திப்பிற்கு அவ்வப்போது ஏற்பாடு செய்யப் பெற்றது. மாலை 4.00 மணிக்குள் மாணவியர் தவறாது வீடு திரும்பும்வண்ணம் கல்லூரி நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்பெற்றன. மாணவர் நடைமுறையில் போதைப்பொருள் பயன்படுத்தல் உள்ளிட்ட தீயநடைமுறைகள் ஒருபோதும் நிகழாவண்ணம் கண்டிப்பு மேற் கொள்ளப்பெற்றது. இத்தகைய நடவடிக்கையால் மாணவர்களின் ஒழுக்கமுறை சீராகப்பெற்றுப் புகழும் பெருமையும் படிப்படியே கல்லூரிக்கு ஏற்பட்டன.

தமிழ்த்துறை சார்பில் வாரம்தோறும் மாணவரின் ஆய்வுப் பயிற்சிக்கு பண்டிதமணி ஆய்வரங்கம் தொடங்கப் பெற்றது. இவ்வாய்வரங்கம் நல்ல பலனைத் தந்தது எனலாம். இவ்வாய்வரங்கம் மூலம் சிலம்பொலி செல்லப்பன், முனைவர் ச. வே. சுப்பிரமணியன், ஜெயகாந்தன், ஔவை நடராசன், பிரபஞ்சன், மேலாண்மை பொன்னுச்சாமி, முனைவர் சுந்தரம் உள்ளிட்ட தமிழறிஞர்கள் வருகை தந்தமை மாணவர்களிடையே உத்வேகத்தை ஏற்படுத்தியது.

மேலும் கல்லூரியில் புகழ்பரவ ஆண்டுதோறும் பட்டமளிப்பு விழா நடத்தப்பெற்றது. முதல் பட்டமளிப்பு விழாவிற்கு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் நாகப்பன் அவர்கள் வருகைதந்து நெறிப்படுத்தினார்கள். அதுமுதல் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் வருகைதந்து சிறப்பித்தமை என்றும் கல்லூரி வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்துடன் 94 இல் அன்றைய கல்லூரிக்குழுத் தலைவர் தமிழண்ணல் அவர்கள் வழிகாட்டலில் மாலைநேர வகுப்புகள் தொடங்கப்பெற்றன. அதுமுதல் கல்லூரி ஆசிரியர் பணியாளர் ஊதியம் தவிர வேறு எவ்வித உதவியும் அரசு செய்யாமையால் தமிழ்த்துறையும் முன்னேற இயலாதவண்ணம் இருந்த நிலைமாறி கல்லூரி புதிய ஆக்கத்தைப் பெறத் தொடங்கியது. மாலைநேரப் படிப்புகள் சுயநிதியில் தொடங்கப்பெற்று மாணவர்களுக்குரிய வசதிகள் நிர்வாகத்தாரால் செய்ய முடிந்தது.

கல்வி பயில உரிய கட்டிட வசதி ஆண்டுதோறும் அழகுடன் தோன்றியது. மாணவர் தம் இருக்கைகள், கல்லூரி அலுவலக இருப்பிடம், முதல்வர் அறை முதலியவை புதியதாகக் கவினுற ஏற்படுத்தப் பெற்றன. இவைகள் தோன்ற ஒவ்வொரு நாளும் சிந்தனை செய்து, நிர்வாகத்தினரின் உறுதுணையுடன் பணிகள் நிறைவேற்றப் பெற்றன. ஆண்டுக்காண்டு ஏதேனும் ஒரு புதிய கட்டிடம் மாணவ மாணவியர்கட்கு புதிய வசதியுடன் ஏற்பட்டது. இவை நெஞ்சில் திரைப்படக் காட்சி போல் தொடர்ச்சியாக நிழலாடியவண்ணம் உள்ளது.

சில சிறப்புப் பணிகளை நினைவு கூறல் இன்றியமையாதது ஆகும். பி.லிட், பட்டப்படிப்பில் ஆங்கிலம் பல்கலைக்கழகத்தாரால் திணிக்கப் பெற்ற பொழுது அத்துறையே இல்லாத கல்லூரியில் அதற்குரிய ஆசிரியர்க்காக, பல்கலைக்கழகத்தில் இயக்குநர் அலுவலகத்திற்குப் போராடியமை மறக்க இயலாது.

ஈ. வெ. ரா. நாகம்மை நினைவு, மாணவியர் இலவச கல்வித்திட்டம் பி.லிட் மாணவியர்க்குக் கிடைக்க அரசியல் பின்னணியில் போராடியதும், அதற்காக, கல்லூரி முதல்வராம் எம் கடித அடிப்படையில் அரசு ஆணை பிறப்பிக்கப் பெற்றதும் என்றும் நினைவு கூரத்தக்கது.

மத்திய அரசு கல்லூரி முதல்வர்களில் சிறப்புடை யோரைப் பல்கலைக்கழகங்கள் மூலம் தெரிவு செய்து தில்லியில் ஒருமாத பயிற்சி அளித்தது. அப்பயிற்சிக்கு நாம் தேர்வு செய்யப் பெற்றமை பயிற்சி பெற்றமை பசுமையான நினைவுகளாகும்.

கல்லூரி மாணவியர் ஒய்வறைக்குக் கல்லூரிக் கல்வி அலுவலகத்தில் நிதி உதவி பெற்றமை நம் முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

பாராளுமன்ற உறுப்பினர் நிதி உதவிக் கட்டிடம் கிடைத்திட வழிவகுத்தது மகிழ்ச்சிக்குரியது. இவை போன்ற நிகழ்வுகள் கல்லூரி வரலாற்றில் நம்மை நினைவூட்டக் கூடியவையாகும்.

முதல்வர் பணியில் மிகவும் குறிப்பிடத்தக்கது ஆண்டுதோறும் நடத்தப்பெற்ற கருத்தரங்குகள் ஆகும். பண்டிதமணி ஆய்வரங்கின் சார்பில் அவ்வவ் ஆண்டிற்குரிய அறிஞர்களின் நூற்றாண்டு விழாவை நினைவூட்டும் கருத்தரங்குகள் சிறப்பாக நடத்தப் பெற்றன. கல்கி, நேரு, கோதைநாயகி அம்மாள், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், மயிலை சீனிவேங்கடசாமி ஆகியோர் நூற்றாண்டு விழாக் கருத்தரங்குகள் தமிழ் உலகில் கல்லூரிக்குப் பாராட்டைத் தந்தன.

மேலும் ஐந்தமிழ் ஆய்வரங்க அமைப்புடன் இணைந்து மூன்று நாட்கள் நடத்திய கருத்தரங்கு, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு இணைந்து நடத்திய இருநாள் பண்டிதமணி கருத்தரங்கு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு இணைந்து நடத்திய அரசஞ்சண்முகனார் கருத்தரங்கு, காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியோடு இணைந்து நடத்திய சங்க இலக்கியக் கருத்தரங்கு, தொடரும் சிற்றிதழோடு

நடத்திய எழுத்தாளர்கள் கருத்தரங்கு, க. ப.அறவாணன் அறக் கட்டளையோடு இணைந்து நடத்திய நீதிநூல்கள் மறுவாசிப்புக் கருத்தரங்கு உள்ளிட்ட கருத்தரங்கங்கள் என்றும் நினைவு கூறத்தக்கவை. இவை அனைத்தும் முதலில் தமிழ்த்துறை வகுப்பறையிலும், பின்னர் மாடியில் அமைக்கப் பெற்ற கொட்டகையிலும், பின்னர் முத்துவிழாக் கட்டடத்திலும் நடைபெற்றிட இப்பொழுது வெற்றிகரமாகப் பழனியப்பர் அண்ணாமலையார் கருத்தரங்க அறை ஏற்படுத்தப் பெற்று நடைபெற்றமை கனவுகள் நினைவாக்கப் பெற்றமையைக் காட்டும்.

விழாக்களோடு நம் பணிக்காலத்தில் அறக்கட்டளைகள் பல ஏற்படுத்தப்பட்டமையும் பெருமைக்குரியவையாகும். மகிபாலன்பட்டி அன்னபூரணி ஆச்சி, வ. பழ. சிதம்பரம் செட்டியார், வ.பழ. சாமிநாதன் செட்டியார், பண்டிதமணி, செம்மல் வ.சுப. மாணிக்கம், டாக்டர் மு.வ, பாலாம்பாள் ஆறுமுகம் ஆகியோர் பெயரில் அமைக்கப் பெற்ற அறக்கட்டளைச் சொற்பொழிவுக்ள் கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பனவாகும்.

வள்ளுவம்: பன்முகப்பார்வை, இன்றைய நோக்கில் பதினெண் கீழ்க்கணக்கு என்ற இருநூல்கள் தமிழ்த்துறைப் பதிப்புப் பணியை வெளிப்படுத்துவனவாகும். இவை இரண்டிற்குரிய பொருட்செலவு நம்மால் ஏற்றுக் கொள்ளப் பெற்றமை மனதிற்கு நிறைவு தருகிறது.

சன்மார்க்க சபையின் திருப்பணியாகத் திருவெம்பாவை கதிர்மணி விளக்கம் மறுபதிப்பு கொண்டு வந்தது சபைக்கு உயர்வு தருவதாகும்.

இத்தகைய செயல்களோடு, மாணவர்தம் கல்விப் பணியில் தனிக்கவனம் செலுத்தப் பெற்றமையால் மாணவர் கல்வித்திறன் பல்கலைக்கழக அளவில் பாராட்டுதலைப் பெற்றது. தமிழ் முதுகலை முதன்மைக்குப் பாரதிதாசன் பல்கலைக்கழகம் முதன்முதலில் டி.எம். நாராயணசாமிப் பிள்ளை தங்கப்பதக்கம் அறிவித்தபொழுது அந்த முதல் ஆண்டிலேயே நம் கல்லூரி மாணவரும் எம் மகனுமாகிய மு.

பழனியப்பன் அப்பதக்கத்தைப் பெற்றமை மறக்க இயலா ஒன்றாகும். பி.லிட், முதன்மை அறிவியல் பாடங்களில் முதன்மை, முழுமையான நூறு சதவிகித வெற்றி என்று ஒவ்வொரு ஆண்டும் கல்லூரி கல்வித்திறனில் பெருமை சேர்க்கப் பெற்றன.

கல்வித்திறன் தவிர மாணவ மாணவியரின் பேச்சுத்திறன், எழுத்துத்திறன், ஆகியவையும் வரலாறு படைப்பவையாகும். சென்னைக் கம்பன் கழக அத்தனை வெள்ளிக் கோப்பைகளிலும் நம் கல்லூரியின் பெயர் பொறிக்கப் பெற்றது. பிற நிறுவனங்கள் நடத்திய போட்டிகளில் நம் காலத்தில் மாணவ மாணவியர் சேர்ந்து பல வெற்றிகள் பெற்றிட மாணவ மாணவியர்க்கு வழி காட்டப் பெற்றது.

நாட்டுநலப் பணித்திட்ட அலுவல்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு நம்மால் அளிக்கப் பெற்றது. எக்காலத்திலும், எவ்விதத் தடையோ, வினாவோ எழுப்பப்படவில்லை. ஒரு யூனிட் இரண்டாக உயர்ந்து தற்பொழுது மூன்றாக இயங்குவது நம் ஒத்துழைப்புக்குச் சான்றாகும்.

இரத்ததானம் என்ற மாபெரும் மனிதநேயச் செயல் கல்லூரி மாணவ மாணவியர்க்குரிய கடமையாகக் கல்லூரியில் இயங்குவது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். எத்தனையோ ஏழை எளிய நோயாளிகள் பயன் பெற்றதோடு, முகாம்கள் பல நடத்தப்பெற்று வரலாறு படைத்தமையும் உண்டு.

கல்லூரிக்கு எதிரில் பண்டிதமணி பூங்கா, குளத்தைச் சுற்றி மரங்கள் நடப்பெற்றமை ஆகியவை சமுதாயப்பணியை நினைவூட்டுவனவாகும். இப்பணிகளில் அரசின் ஆதரவு பெற நாம் எடுத்த முயற்சிகளைச் சபையார் இன்றும் பாராட்டுவர்.

இத்தகைய, கல்லூரிப் பணிகளோடு சன்மார்க்க சபைப் பணியிலும் பணி செய்ய வாய்ப்புக் கிடைத்தமை மறக்க இயலாததாகும். முத்துவிழா மூன்று நாட்கள் நடந்திட அயராது உழைக்கப் பெற்றது. நம் உழைப்பினை இன்றும் சபையார் மனதில் நிலைத்து நிற்கச் செய்துள்ளது.

சபையின் அன்றாட அலுவல்களில் ஈடுபாடு கொண்டு நடைமுறைகள் இயக்கப் பெற்றன. நிர்வாகச் சிக்கல்கள் தீர சபையார் மேற்கொள்ளும் திடீர் நடைமுறைகளில் முழுமையான பங்கு கொண்டமை எம் நன்றிக் கடனாகும். மாவட்ட ஆட்சியர் மூலம் கல்லூரிச் சாலை சிமிண்ட் சாலையாக அமைக்கப் பெற்றமையைச் சபையார் மகிழ்ந்து பாராட்டினர். ஆண்டுதோறும் சபைவிழா, நம் பொறுப்பில் நடத்தப் பெற்றமை சபையார் என்றும் நினைவு கூர்வர். விழாக்களில் எவ்விதச் சிக்கல்களும் தோன்றாவண்ணம் குறித்தபடி நடத்திட நம் ஏற்பாடுகள் சிறப்பாக அமையும். இதில் யாரும் எவ்விதக் கருத்து வேறுபாடும் கூறிட இயலாது.

உயர்திரு வ.பழ. சா. பழனியப்பர், உயர்திரு விசு. பழனியப்பர், உயர்திரு சி.நாகப்பர் ஆகிய மூன்று செயலர்கள் தலைமையில் தமிழ்த்துறையும், உயர்திரு வ.பழ. சா. சிங்காரம் அவர்கள் தலைமையில் அறிவியல் துறையும் இன்றுவரை கண்ணும் கருத்துமாக எவ்விதக் கருத்து வேறுபாடும் இன்றிக் கட்டிக் காக்கப் பெற்றுள்ளது. நிர்வாகம் என்றைக்கும் நம்மீது குறைகூறாது அவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப நடந்து பிரச்சனை இல்லாத முதல்வராகப் பணியாற்றி விடை பெறுகிறோம் என்ற நிம்மதி உண்டு. இந்த நிலைக்குப் பெருந்துணை சன்மார்க்க சபைக் குடும்பத்தார், அடுத்து என்றும் நாம் நன்றி மறவாத நினைவுக்குரிய அலுவலகச் சகோதரர்கள். அவர்கள்தான் நம் பணிக்கு அடித்தளமே. பணியேற்ற நாள்முதல் இன்றுவரை அவர்களின் ஒத்துழைப்பு, நம்மீது கொண்ட மரியாதை, துரோகம் செய்யாத மனப்பான்மை அப்பப்பா அவர்தம் இதயங்களுக்கு என்றும் நன்றிக் கடப்பாடு உடையோம்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை வேண்டும் அனுமதி அளித்து வேண்டிய பணியை நிறைவேற்றிக் கொண்டோம் என்றேதான் கூற வேண்டும். முதல்வர் ஆசிரியர் உறவு நம்மைப் பொறுத்தவரை மனதில் முழு நிறைவே. கருத்தரங்க விழாப்பணிகளில் தக்க உதவிகள்

ஆசிரியர்கள்பால் கிடைத்தமை, வகுப்புப்பணிகளில் ஆசிரியர்கள் காட்டிய உண்மையான ஒத்துழைப்பு என்றும் பாராட்டுதலுக்கு உரியதாகும். குறிப்பாகப் பேராசிரியர் முனைவர் பழ. சிதம்பரம் அவர்கள் உற்றுழி உதவிய தன்மையை என்றும் மறக்க இயலாது. மாலைநேர வகுப்பாசிரியர்கள் நம் அன்புக்குரிய நிலையில் செயல்பட்டமை வாழ்த்துக்குரியது.

இத்தகைய அடிச்சுவடுகள் பதிய அருள்பாலித்த சபையின் முழுமுதற் கடவுளாம் கணேசப் பெருமானுக்கும், ஆதரவும் அனுமதியும் அளித்த சபையோருக்கும், கல்லூரியினருக்கும் நன்றி கூறிப் பணியில் ஓய்வு பெறுகின்றோம். படிக்கவைத்து படிப்பிக்க வைத்த கணேசர் செந்தமிழ்க்கல்லூரிப் பணி எம் வாழ்வில் என்றும் மறக்க இயலாத பணியாகும்."

அரிமா முத்தப்பர்

இவ்வாறாக 18 ஆண்டுகள் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் முதல்வராக இருந்த காலத்தில் இவர் கல்லூரிப் பணிகள் ஆற்றியதோடு பொதுப்பணிகளிலும் பங்கேற்றிருக்கின்றார். அவற்றுள் முக்கியமாகக் குறிப்பிட்டே ஆக வேண்டிய பணிகள் இரண்டு. ஒன்று பொன்னமராவதி அரிமா சங்கத்தில் இணைந்து அறப்பணிகள் பல புரிந்தது. மற்றொன்று, பொன்னமராவதியில் கம்பன் கழகம் நிறுவித் தொடர்ந்து கம்பன் விழாக்களை நடத்தியது.

பொன்னமராவதியில் பல்லாண்டுகளாக இயங்கி வரும் அரிமா சங்கம் இவரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு சிறப்புப் பெற்றது. பல்வேறு தொண்டுகள், பள்ளியமைத்தல் ஆகிய நிலைகளில் இவரது பங்களிப்பு அச்சங்க வரலாறோடு தொடர்புடையது. இச்சங்கம் தனக்கென உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கென நகரினை அமைத்த போது முதன்முதலாக மனைகட்டிக் குடிபுகுந்த முதன்மை யாளர்களுள் பழ. முத்தப்பனாரும் ஒருவராவார்.

கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்த்து...

அதுபோல,தொடங்கிய காலத்திலிருந்தே மிகப் பெரிய அளவில் கம்பன் கழகத்தினைச் செயலராக இருந்து நடத்தியவர் பழ. முத்தப்பனார். தமிழகத்தின் மிகச் சிறந்த பேச்சாளர்களையெல்லாம் அழைத்து வந்து பட்டிமன்றம், வழக்காடு மன்றம், உரையரங்கம், கவியரங்கம் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்திருக்கின்றார். விழாவில் உரையாற்றுவோர்க்கு மட்டுமன்றிக் கேட்போருக்கும் விருந்தளிப்பது கம்பன் கழகத்தின் சிறப்பாகும். அதன்பணிகள் நிகழ்வுகள் தனியே ஆய்வு செய்யத் தக்க அளவில் விரிவானவை. இப்போது செயல்படாது இருக்கும் இக்கழகம் விரைவில் இவரது மறு முயற்சியால் செயல்படத் தொடங்கும் என நம்பலாம்.

இக்காலத்தில் இவரது மேடைப்பணிகள் அளப்பரிய அளவில் விரிந்திருந்தன. தமிழகத்தின் மிகப் பெரிய தமிழறிஞர்களின் தலைமைகளின் கீழ் உரையாற்றி யிருக்கின்றார். பட்டிமன்ற, வழக்காடு மன்ற விவாதங்களில் பங்கேற்றிருக்கின்றார். தாமே நடுவராகிச் சுவைமிகு இலக்கியத் தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றார். சுமார் ஒரு மணிநேரத்திற்கும் குறையாமல் எதிர்பார்ப்புணர்வு குறைவு படாமல் சஸ்பென்ஸோடு கொண்டு போய்த் திடீர்த் திருப்பம்போலத் தீர்ப்புத் தருவது இவரது தனித்தன்மை. ஒவ்வொரு மேடையிலும் புதிதாக நயம் சொல்ல வேண்டும் என்பதை வழக்கமாகக் கொண்டிருப்பார். அவரே சொல்வதைப் போலக் கம்பீரமான குரல்வளம் அவருடையது பெரியபுராணக் கதை சொல்ல ஆரம்பித்தார் என்றால் கேட்டோர் உருகிவிடுவர். கோச்செங்கணன் வரலாறு சொல்வாரேயானால் கேட்போர் கலங்கியழுவர். தற்கால நிகழ்வுகளோடு சுய அனுபவத்தையும் இணைத்து இவரளிக்கும் இலக்கிய விளக்கம் அலாதியானது. பலரது வாழ்வில் திருப்பங்கள் ஏற்படுத்தியது.

தமிழாகரர் முத்தப்பர்

பழ.முத்தப்பனார், முறையாகச் சைவ சித்தாந்தம் கற்று ஒழுகும் இவர் முறைப்படி தீட்சை பெற்றவர். தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் இலக்கிய நிகழ்வுகள் அனைத்திலும் தொடர்ந்து பங்கேற்கும் வாய்ப்பு இவருக்கும் இவரைப்போலவே உருவத்தால் உள்ளத்தால் ஒருமைப்பட்டிருக்கும் இன்னொரு முதல்வரான பேராசிரியர் தெ.முருகசாமியாருக்கும் கிட்டிற்று எனலாம். அதனால்தானோ என்னவோ அடிகள் பெருமான் இவ்விரு முதல்வர்களுக்கும் தமிழாகரர் விருதளித்துப் பாராட்டினார்கள் போலும்.

இவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் வைகாசிவிசாகவிழாவில் (6.6.1990) தமிழாகரர் என்னும் விருதளித்து மகிழ்ந்தது. அப்பாராட்டுப் பத்திரச் செய்தி பின்வருமாறு

"திரு.பழ.முத்தப்பன் அவர்கள் தனவணிகர் மரபில் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில், புதுவயலில் தோன்றியவர். இவர் தகப்பனார் திரு. பழனியப்பச் செட்டியார். தாயார் திருமதி. இலக்குமி ஆச்சி. தமிழில் புலவர் பட்டமும், எம்.ஏ., பட்டமும் பெற்று முனைவர் பட்டமும் பெற்ற பெரும்புலமையாளர். மயிலம் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியில் 18 ஆண்டுகள் துணைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.இப்போது மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வருபவர்.

நூற்றுக் கணக்கான ஆய்வுக் கட்டுரைகளும், எட்டு நூல்களும் எழுதியவர். அருணந்தி சிவாச்சாரியாரின் நூல்கள் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை எழுதி முனைவர் பட்டம் பெற்றவர். அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் பல ஆற்றியவர்.ஆற்றல் வாய்ந்த சொற்பொழிவாளர். சைவமும் தமிழும் இரு கண்ணாகப் போற்றி வருபவர். தரமிகுந்த எழுத்தாலும், பேச்சாலும், சிறந்த தொண்டாற்றி வரும் இளையதலை முறையைச் சார்ந்த நல்லறிஞர். இவருக்குக் குன்றக்குடித்

திருவண்ணாமலை ஆதீனம் விசாகத் திருநாளாகிய இன்று தமிழாகரர் என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்து ஆதீன அறிஞர்குழாத்தில் ஒருவராக இணைத்துக் கொள்வதில் மகிழ்வடைகிறது..."

நாடகத் தமிழும் நயந்து...

இக்காலக்கட்டத்தில் பெரும்புலவர் பா.நமச்சிவாயம் அவர்களுடன் இணைந்து கோல உரையாடல் என்னும் இலக்கியப் புதுமை நிகழ்விலும் பங்கேற்றிருக்கின்றார். வாழ்க்கைக்கு வழிகாட்டும் தமிழ் இலக்கியச் சான்றோர்கள் இன்றுஉயிர் பெற்று வந்தால்... எப்படியிருக்கும் என்ற கற்பனையிலான கோல உரையாடல் அது. கம்பனைப்போல்,வள்ளுவன்போல், இளங்கோவைப் போல், சேக்கிழார் போல், பாரதியார் போல் வேடமிட்டு அவர்களாகவே அரங்கில் உரையாடுகின்ற புதுமை நிகழ்வு இது. பேராசிரியர் பா.நமசிவாயம் அவர்கள் இணைந்து நடித்து இயக்கும் இவ்வுரையாடலில் சேக்கிழாராக, இளங்கோவடிகளாக வேடமேற்று நடித்தவர் பழ.முத்தப்பனார். தமிழகத்தில் மட்டுமல்லாமல் சிங்கப்பூரிலும் சென்று அரங்கேறியவர். இந்நிகழ்வின் சிறப்புக் கருதி அவ்வேடத்திற்கென முடிதுறந்தும் இருக்கின்றார். இவ்வாறு கலையார்வத்தோடு இயங்கியவர் இவர் எனலாம்.

1997இல் இச்சிறப்பு நிகழ்ச்சிக்காகச் சிங்கப்பூர் சென்றுவந்த இவர் 1998இல் திருமுறை மாநாடு சிறப்புச் சொற்பொழிவுக்காகச் சென்று தமிழ்த் தொண்டாற்றி யிருக்கின்றார். 03.08.1998 நாளிட்ட தமிழ்முரசு என்னும் சிங்கப்பூர் நாளிதழ் அரைப்பக்கத்திற்கும் மேலான அளவில் நிழற்படங்களோடு செய்திகளை வெளியிட்டிருந்தது. *"சிங்கப்பூர் ஈசூன் அவென்யூ 3ல் உள்ள அருள்மிகு மகாமாரியம்மன் கோவிலில் 63 நாயன்மார்கள் குருபூசை நடைபெற்றது. பேராசிரியர் ந.ஏ.சண்முகம், முனைவர் பழ.முத்தப்பன், செ.ப. பன்னீர்ச் செல்வம் ஆகியோர் கேள்விபதில் நேரத்தில் கலந்து கொண்டு மக்களின்*

பலகேள்விகளுக்கும் விளக்கம் தந்தார்கள்.."

அதுசமயம் சிங்கப்பூர் வெண்பாச்சிற்பி வி.இக்குவனம் அவர்கள் பாடிய அன்ன பந்த வெண்பா பின்வருமாறு:

"முத்தப்பர் மூதறிஞர் முத்தமிழில் முத்தொத்த
தத்துவராம் எஞ்ஞான்றும் தக்கவராம்–சத்தியமே
வென்றிபெற வேண்டுவன் வென்றிபெற்றே நூறாண்டு
முன்வாழ்க நீர் எங்கள் முத்து!"

இப்பாடலைத் தாங்கிய அன்னபந்தப் படம் பின்னிணைப்பில் உள்ளது. மேலும் அவ்விழாவில் இவர் வாசித்தளித்த வரவேற்புப் பாமாலையும் உள்ளது.

இதற்குப் பின்னர் 2001 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தொலைக்கல்வி பயிற்றுநராகச் சென்றுவந்திருக்கின்றார்.

தொடர்ந்து 2003ஆம் ஆண்டிலும் சித்தாந்தச் சொற்பொழிவிற் காகச் சென்று வந்திருக்கின்றார்.

ஆதீன விருதுகள்

இவரது சைவசித்தாந்த ஈடுபாட்டினையும், அதனைப் பரப்பும் பாங்கும் கருதி, உறையூர் வாரவழிபாட்டுக் கழகம் சார்பில் தருமை ஆதீனக் கட்டளைத் தம்பிரான் சுவாமிகள், சிவஞானச் செம்மல் என்ற விருதினை வழங்கியிருக்கின்றார்கள். (18. 12. 2005)

அதேபோல, திருவாவடுதுறை ஆதீனம், சித்தாந்தச் செம்மல் என்ற விருதளித்துச் சிறப்பித்திருக்கின்றது. (02. 02. 2006)

தொடரும் சைவத் தமிழ்த் தொண்டுகள்

சிவநேயச்செல்வரான பழ.முத்தப்பனார் மேலைச்சிவபுரியில் பணிபுரிந்த காலத்தில் பொன்னமராவதி சிவன் கோவிலில் பிரதோச நாட்களில் பெரியபுராணம் சொல்வதையும் பிரதோச வழிபாடு நிகழ்த்துவதையும் இனிது நடத்தி வந்தார். திருச்சிராப்பள்ளிக்குப் பணி

காரணமாகப் பெயர்ந்த பின்னர் அவ்வருட்பணியைத் தகுதி உடையவரிடத்தில் ஒப்படைத்து வந்தார். அன்னை மனம் கொண்ட அன்னை மெடிக்கல் உரிமையாளர் அண்ணல் அரு.வே. மாணிக்கவேலு அதனை இன்றளவும் தொடர்ந்து ஆற்றிவருகின்றார். திருச்சிராப்பள்ளியில் உறையூர் ஐவண்ணநாதர் திருக்கோயிலில் இவ்வருட்பணியினைத் தொடர்ந்து ஆற்றிவருகின்றார் பழ.முத்தப்பனார்.

தலைமுறைத் தமிழ்நேசம்

பேராசிரியரும் முதல்வரும் ஆகிய பழ. முத்தப்பனார் தம்மைப்போலவே தம்புதல்வரையும் தமிழ்ப் பேராசிரியராக ஆக்கிப் பார்த்தவர் என்பதனை விட அவரது வழியில் அதிகம் குறுக்கிடாது வளரவிடுத்தவர். ஒரு பிரபலத்தின் பிள்ளையாக இருந்து வளர்வது எத்துணை கடுமையானது என்பதனை அனுபவித்து வளர்ந்தவர் பழனியப்பன். எந்த நிலையிலும் தன்னளவில் அப்பாவின் பெயருக்கு மாற்று வந்துவிடக்கூடாது என்பதில் கவனம் கொண்டதோடு கூடிய மட்டிலும் அவரது சார்புத் தனம் இல்லாமல் தன்னை வளர்த்துக் கொண்டவர் என்ற அளவில் பெற்றதினும் இனிய மகிழ்வைப் பெற்றோருக்குத் தந்திருப்பவர்.

"என் ஆசிரியர். என் வழிகாட்டி. என்முன்மாதிரி என் தந்தையார் என விரிந்து கொண்டே போகும் எங்கள் உறவு சரவண முதலியார் அ.ச.ஞானசம்பந்தம், இலக்குவனார் மறைமலை எனத் தலைமுறைத் தமிழ் நேசமாக இனிவரும் இலக்கிய வரலாறுகளில் பேசப்பெறும் என நினைக்கையில் உள்ளம் உயர்வு கொள்ளுகின்றது" என்று பெருமிதத்தோடு குறிப்பிடும் முனைவர் மு.பழனியப்பன், சென்னை தரமணியில் உள்ள தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தில் துணை இயக்குநராகப் பணியாற்றி வருகின்றார். தந்தை வழியில் எழுத்து, பேச்சு, எண்ணம் அனைத்தையும் தமக்கான பாணியில் வடிவமைத்துக்

கொண்டு வளர்ந்து வரும் நல்ல ஆய்வாளர். புத்திலக்கிய விரும்பி. பெண்ணியச் சிந்தனையாளர்.கவிதைகளோடு, கதைகளும் எழுதி வரும் இவர் தொடரும் இலக்கிய இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவர். இவர்தம் இல்லறத் துணையான திருமதி மெய்யம்மை என்ற விஜயலட்சுமியுடனும், மகள் அழகுநந்தினியுடனும் சென்னையில் வசித்து வருகின்றார்.

தன்னளவில் இனிய இல்லறம் நடத்தித் தமது பிறந்தவீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்த்து வருபவர் பழ.முத்தப்பனார்தம் அன்பு மகள் மீனாட்சி. பி.காம் பட்டதாரியான இவர் தமது கணவர் இராம. இலக்குவனாருடனும், அலமேலு, நாச்சம்மை என்ற இருபெண்மக்களுடனும் பெங்களூரில் வசித்து வருகின்றார்.

தமது மருமகனார் இராம. இலக்குவனார் இன்னொரு புதல்வர் என்று சொல்லுமளவில் பழ.முத்தப்பனார் காட்டும் அன்பும் பாசமும் தனித்துவமானது.

மீண்டும் முதல்வர்

எதையும் திட்டமிட்டுச் செய்வதில் வல்லவரான இவர் எழுத்து, பேச்சு, இவற்றோடு சிறந்த நிர்வாகத்திறனும் கொண்டு விளங்குகின்றவர் என்பதனை ஆரம்பத்திலிருந்தே கவனித்து வந்த நகரத்தார்கள் இவர் பணிஓய்வு பெற்ற உடனே, தாம் திருச்சிராப்பள்ளியில் தொடங்கி நடத்திவரும் செட்டிநாடு கலைக் கல்லூரிக்கு 1.06.2003 முதல் முதல்வராக்கி இருக்கின்றனர்.

செட்டிநாடு அறக்கட்டளைக் குழுத் தலைவர் காசிச் செட்டியார், செயலர் அடைக்கலவன், பொருளர் லெட்சுமணன் ஆகிய பெருமக்களின் ஒத்துழைப்பினால், படிப்படியாக இக்கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார் முதல்வர். வாடகைக் கட்டடத்தில் இயங்கிவந்த இக்கல்லூரியானது, இப்போது மிகப்

பிரம்மாண்டமான கட்டடங்களைக் கொண்ட சொந்த வகுப்பறையில் இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கும் மிகச் சிறப்பாகப் பட்டமளிப்பு விழாவினை நடத்தியிருப்பதோடு மாணவ, மாணவியர் சேர்க்கையை அதிகரித்துக் கல்விப் பணியினைத் திருச்சிராப்பள்ளி நகரில் ஆற்றி வருகின்றார். மேலும், தினமலர் நாளிதழுடன் இணைந்து பள்ளி மாணவ, மாணவியர்க்குத் தேர்வு வழிகாட்டும் வெற்றி நிச்சயம் என்ற நிகழ்ச்சியை நடத்தியிருக்கின்றார்.

தொடரும் தமிழ்ப்பணிகள்

அத்தோடு வழக்கம் போல, எழுத்துப் பணியில் மேலும் மூன்று நூல்களை எழுதியிருக்கின்றார். தொடர்ந்து உறையூர் ஐவண்ணநாதர் கோவிலில் பிரதோச நிகழ்வு உரை நிகழ்த்துகின்றார். திருமுறைகள் மற்றும் சைவசித்தாந்த வகுப்புகள் நடத்தி வருகின்றார். தமிழகத்திலுள்ள அனைத்துக் கம்பன் மற்றும் வள்ளுவர் மன்ற நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றார். லால்குடி திருக்கோயிலில் பொழிவு, திருச்சிராப்பள்ளி பெரியார்நகரில் ஒவ்வொரு நான்காவது ஞாயிற்றுக்கிழமையிலும் சாத்திர வகுப்பு, முதல் ஞாயிற்றுக் கிழமையில் உய்யக் கொண்டான்திருமலைத் திருக்கோயிலில் பெரியபுராணச் சொற்பொழிவு இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையில் தேவகோட்டையில் சைவசித்தாந்த வகுப்பு எல்லா நாட்களையும் பொழுதுகளையும் தமிழ்ப் பணிக்காக ஒதுக்கி இயங்கிக் கொண்டிருப்பவர். இவ்வாறு சமயத் தமிழ்பரப்பும் பணி செய்வதோடு சமயகால இலக்கியத் தமிழ் பரப்பும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார். ஆம். மனோன்மணீயப் பல்கலைக் கழகத்தின் முன்னைத் துணைவேந்தர் முனைவர் க.ப.அறவாணன் அவர்கள் அமைத்து ஊர்கள்தோறும் நடத்திவரும் 'வாசிக்க வாங்க' இயக்கத்தை, திருச்சிராப்பள்ளியில் அவரது மாணாக்கர் முனைவர் அறவேந்தன்

அவர்களுடன் இணைந்து பழ.முத்தப்பனார் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என இன்றளவும் நடத்தி வருகின்றார். இன்றும் இவரது பெயர்ப் பலகையின் பின்னால் இருக்கும் வாசகமான காலம்போற்று என்னும் தொடர்வழி இயங்குவதைக் காணமுடியும்.

பழ. முத்தப்பனாரின் படைப்புகள்

நாச்சாத்தாள் உலகமாயாள் தாலாட்டு (1967), முப்பொருள் இயல்பு (1978), சிந்து இலக்கியம் (1983), திருமுறைகளில் அகக் கோட்பாடு (1986), சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்கள்(1987), சிவஞான சித்தியார் நூல்கள் ஓர் ஆய்வு (2002), ஞானாமிர்தம் விளக்கவுரை(2002), சிவஞான சித்தியார் சுபக்கம் விளக்கவுரை (2003), திருக்கோவையார் (2006) ஆகியன இவர் எழுதி வெளியான நூல்களாகும். இன்னும் அச்சேற வேண்டியவை மிகுதியாக உள்ளன.

இவை தவிர, மயிலம் திருப்புகழ் திருப்படி விழாமலர் (1980), சரசுவதி சங்க மணிவிழா மலர்(1982), திருக்கோயில் வழிபாட்டு விதிகள்(1986), பிள்ளையார் (1987), பா.நமசிவாயம் மணிவிழா மலர் (1993), புதுவயல் கைலாச விநாயகர் குடமுழுக்கு விழா மலர்(1995), மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை முத்துவிழா மலர்(1999), திருக்குறள் பன்முகப் பார்வை(2000), இன்றைய நோக்கில் பதினெண் கீழ்க்கணக்கு(2002), சிங்கப்பூர் பன்னிருதிருமுறை மாநாட்டு வெள்ளி விழா மலர்(2005) ஆகியவை இவர் பதிப்பித்த நூல்களாகும்.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியில் 'மெய்யம்மை அறக்கட்டளைச் சொற்பொழிவை'. 'கோவை இலக்கியங்கள் ' என்னும் தலைப்பிலும்(1974), திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத்தில் வ.அய்.சுப்பிரமணியம் அறக்கட்டளைச் சொற்பொழிவை,

'சிலப்பதிகாரமும் பெருங்கதையும்' என்ற தலைப்பிலும்(1992), மதுரைப்பல்கலைக் கழகத்தில் ராய.சொ. அறக்கட்டளைச் சொற்பொழிவாக, 'செட்டிநாடும் தமிழும்' என்ற தலைப்பிலும் (1998) நிகழ்த்தியிருக்கின்றார்.

ஊடகத் துறையிலும்

வானொலி, தொலைக்காட்சி நிகழ்வுகளில் பல்வேறு உரைகள் நிகழ்த்திவரும் இவர் நேர்முக வருணனை செய்வதிலும் வல்லவர். அயல்நாடுகளிற் சென்று தமிழ் முழக்கம் செய்ததுபோலவே, புதுதில்லி தமிழ்ச் சங்கம், மும்பை நகரத்தார் சங்கம் உள்ளிட்ட வடஇந்தியப் புலங்களிலும் சென்று உரையாற்றியிருக்கின்றார்.

ஆய்வு நெறியாளர்

முதுகலை அளவில் 13 பேருக்கும், இளம் முனைவர் அளவில் 12பேருக்கும், முனைவர் அளவில் இருவருக்கும் இவர் ஆய்வு நெறியாளராகத் திகழ்ந்துள்ளார். இவரது நெறிகாட்டலில் அரசஞ்சண்முகனாரின் சிற்றிலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர் பழ.சிதம்பரம் அவர்கள் இப்போது மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பழ. முத்தப்பனார், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் பாடத்திட்டக் குழு உறுப்பினராகவும், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பொதுக்குழு உறுப்பினர் மற்றும் கல்விநிலைக்குழு உறுப்பினராகவும், பொறுப்புகள் வகித்துள்ளார்.

மேலும் சில பணிகள்....

தமிழில் கடந்த 15ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும் தொடரும் இதழின் தொடக்கம் இவரது இல்லத்திலிருந்து தான் என்பது

இங்குக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். இவரது துணைவியார் அழகம்மை அவர்களின் உழைப்பில் மாதந்தோறும் உருளச்சு இதழாக, 90களில் தொடங்கப் பெற்றது இவ்விதழ். அதன் முதல் வாசகராகத் தம்மை ஆக்கிக் கொண்ட பழ.முத்தப்பனார் அதன் உருவாக்கப் பணிகளில் நேரம் வாய்க்கும்போதெல்லாம் ஈடுபடுவதுண்டு.

இப்போது இவருக்கு வயது அறுபது நிறைந்தது எனச் சொல்லி மணிவிழா, வெற்றி மாலையோடு வந்து நிற்கின்றது. தம்மை வளர்த்த புதுவயல் ஸ்ரீ சரசுவதி சங்கத்திற்கு ரூபாய் 25,000 ஐ வழங்கியதோடு, தம்மை முதல்வராக்கி உயர்த்திய மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கல்லூரிக்குத் தமது குடும்பத்தாரோடு இணைந்து ரூபாய்.45,000/= செலவில் அழகிய வளைவு நுழைவாயிலை அமைத்துத் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களைக் கொண்டு திறந்திருக்கின்ற இவர் இன்னும் எத்தனையோ அறப்பணிகளை அருந்தமிழுக்காக ஆற்றியிருக்கின்றார்; ஆற்ற இருக்கின்றார்.

எல்லா நிலைகளிலும் உடனிருந்து இவரை ஊக்குவித்துப் பேணும் அன்னை அழகம்மை இவரது உற்சாக இளமைக்கு ஊக்கம் தரும் அமுது. பிள்ளைகள் பெற்றோர் நலம் பேணும் இனியர். பேத்தியரோ, மழலை அமுதம் நல்கி இளமை வரமருளும் இறை பீடங்கள்... மாணவ, மாணவியர்தாம் இவரது இனிய தோழமைகள்...

எங்கு போனாலும், எப்புறத்துத் திரும்பினாலும் ஐயா வணக்கம் என்று சொல்லும் யாரேனும் ஒருவர் இவர் மாணவ அல்லது மாணவியாய் இருப்பது நிச்சயம்... பாரபட்சமின்றிப் புன்னகை ஒன்றை மலராய் விரித்து இவர் அமைதியாக இப்போது இயங்குவதைப் பார்க்கும் எந்தப் பழைய மாணவருக்கும் அதிசயமாய்த்தான் படும். வயதுக்கு, வயதாகிறது அல்லவா?

அதனால் இவர் இளமைக்குள் மீண்டிருக்கின்றார். இன்னொரு திருமணநாள் இவருக்கும் இவர்தம் துணைவியார்க்கும் நிச்சயமாகி இருக்கின்றது. மீண்டும் தான் பெற்ற பிள்ளைகளும், பேரக்

குழந்தைகளும் பார்க்க இவர் தம் துணைவியார்க்குத் திருப்பூட்டப் போகின்றார்.

மணிவிழா நாயகர் பழ. முத்தப்பனார்

11.05.2006 வியாழக்கிழமை காலை 10.15 மணியளவில் சிவகங்கை மாவட்டம் புதுவயலில் பழ.முத்தப்பனாரின் இல்லத்தில் இனிதே நிகழ இருக்கின்றது மணிவிழா. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் ஆசியுரை நல்கும் அவ்விழாவில் முனைவர் ச.வே.சுப்பிரமணியனார் தலைமையில், பேராசிரியர் ஆ.சிவலிங்கனார், முனைவர் க.ப. அறவாணன், பேரா. பா.நமச்சிவாயம், பேரா.விசு.பழனியப்பன், பேரா.த.இராசாராம், மது.ச.விமலானந்தம், பேரா.தெ.முருகசாமி, முதலான தமிழறிஞர்கள் கூடி வாழ்த்திசைக்கின்றனர். இவர்தம் மகனாரும் மாணாக்கரும் இந்நன்னாளை நினைவுகூர்ந்து தத்தம் நூல்களைக் காணிக்கையாக்கி மகிழ இருக்கின்றார்கள்.

வாழ்த்தி மகிழ்வோமாக


இன்னும் எவ்வளவோ இருக்கத்தான் செய்கின்றன.. எழுதவும்,பேசவும் இவர் தமிழ்த்தொண்டுகள் இன்னும் பல ஆற்றவும். காலம் கருணை உள்ளது. விரைவில் இந்த இலக்கியத் தம்பதியினருக்கு, இனிய தமிழ்ப் பரிசாய் முத்து,பவழவிழாக்களைக் கொண்டு தரும். எல்லாரும் நலமோடும் வளமோடும் இருந்து வாழ்த்திசைக்கும் நேரம் வாய்க்கும். அதுவரைக்கும் நன்றி சொல்லி இப்போது இவர்களுக்கு வாழ்த்திசைப்பதுதான் முறை அல்லவா?

பைந்தமிழ்க் காவலர் பழ. முத்தப்பனார் தம் அன்புத் துணைவியார் அழகம்மையாருடன் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க. நலம் ஓங்குக.

சிங்கப்பூர் ஸ்ரீ ருத்ரகாளி அம்மன் ஆலயச்
சார்பில் படித்தளிக்கப்பட்ட வாழ்த்துப் பா

முத்தப்பர் மூதறிஞர் முத்தமிழில் முத்தொத்த
தத்துவராம் எஞ்ஞான்றும் தக்கவராம் – சத்தியமே
வென்றிபெற வேண்டுவன் வென்றிபெற்றே நூறாண்டு
முன்வாழ்க நீர்எங்கள் முத்து

அன்னபந்தம்



பாடலாக்கம் வெண்பாச் சிற்பி
வி. இக்குவனம்
05-08-1998

பழ.முத்தப்பனாரின் தலைமாணாக்கர்
காஞ்சிபுரம் பச்சையப்பாக் கல்லூரிப் பேராசிரியர்
அமுத இளவழகனார் பாடிய ***முத்தாற்றுப்படை***

இல்லோர் செம்மல்

நுங்கோ யாரென வினவி னங்கோ
இல்லென வந்தோர்க் கேற்பன வீந்து
நல்லது செய்யும் இல்லோர் செம்மல்;
வருவதும் போவதும் வகையறிந் தியற்றும்
பெருநெறி கற்ற திருவுடை யாளர்
மனைக்கு விளக்கம் மடவாள் என்ற
மனையறம் காக்கும் மங்கையர்க் கரசி
அழகாம் அம்மை அருந்துணை யோடு
பழநி யப்பன் மீனாள் என்னும்
நன்கலம் பெற்ற நலத்தகு சான்றோர்
மங்கல வாழ்வின் மாண்பின் மிக்கார்
ஆன்ற பெருமை அருந்தமிழ் வல்ல
சான்றோர் சூழும் தொண்டைநன் நன்னாட்டில்
பயிலும் அன்பர் பலர்சூழ்ந் திருக்க
மயிலமா நகரில் மன்னவன் உறையுள்!
இத்தகு நல்லார் முத்துடை வள்ளல்
வித்தகர் வாழும் வியன்பதி சென்மின்!
சென்றே காணல், நன்றே அன்றோ!
மயிலுங் குயிலும் மற்றுமங் குறையும்
மந்தியும் கூட மாத்தமிழ் பேசும்!

வந்தவர் வினையை வாங்குநல் லருளின்
சிந்திப் பரிய செவ்வேள் மன்றம்
காணச் செல்லும் கவின்மிகு வழியில்
மாணத் திறந்த மாபெரு வாயில்;
வாயில் மருங்கில் வருகென அழைக்கும்
சாயல் கொண்டோர் தோகை நின்றே!
செல்வீர் அம்மனை; சேர்வீர் அடியை;
நல்லபல் உரைகள் நலமுறக் கேட்டே
இல்லென் சொல்லே இல்லென் றாக
வெல்வீர் எதையும்; விளைவது பொலிவே!

சிந்துக்குத் தந்தை

நுங்கோ யாரென வினவின் எங்கோ
சங்க காலப் புலவர், புரவலர்
இங்கொருங் கெழுந்தார் என்னு மாறு
புலமையும் புரக்கும் வளமையும் உடையார்;
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியர்
தொகையாய்ப் பாட்டாய், தொடர்காப் பியமாய்
வகைபல கண்ட வளர்தமிழ்த் தாய்க்கு
சிந்திலக் கியநூல் தந்தவர்; அதற்கே
தந்தை எனும்பெருந் தகவுடை யாளர்!
வழியிற் செல்வோர் வழங்கா விடினும்
வழிமறித் தவர்பொருள் வாங்கிக் கொள்ளும்
மந்திகள் பயிலும் மலைநா டதனில்
வந்தவர்க் கெல்லாம் வரையா தெங்கோன்
தந்து பெரும்பொருள் தான்மகிழ்ந் திடுவார்,
விருந்தில் உண்டி மருந்தெனு மாறு
இருந்தே தம்மில் யாவரும் உண்ணச்

செய்யும் மனையாற் செழிக்கும் இல்லறம்
ஐயன் பெற்ற அருந்தவப் பயனே!
நல்லியக் கோடன் நகரில் இருந்து
புரட்சிக் கவிஞன் புத்தூர் செல்லும்
நெடிய சாலையில் மயில மாநகர்
உடைய தாகுமால் உடனங் கேகுவீர்,
பெற்ற செல்வம் பிறர்க்களித் தெம்மான்
கற்றிடும் அன்பர் கணத்திடைக் களிப்பார்;
ஆய்தமிழ் இன்பம் அறிதற் கவாவி
தோயுளங் கொண்ட தோகையங் குலவும்;
பாய்முசுக் குருளையும் பக்கல் நின்றே
வாய்பார்த் தெங்கோன் வண்டமிழ் சுவைக்கும்;
செய்ய தமிழால் செழியனும் செல்வியும்
ஐயா! வருகென அன்புடன் அழைப்பர்!
இன்றே பாண இன்னே செல்க!
உன்னிசை அய்யன் ஊன்கலந் தினிக்கும்!
நூலாக் கலிங்கம் வாலரை கொள்ள
பாலடி சில்லும் பழவகை பலவும்
அறுசுவை யோடு அமைவிருந் துணவும்
கொண்ட பின்னர் எந்தை சொல்லும்
திருவாய் அமுதம் செவிக்குண வாக
வருவீர் வாழ்வில் வளம்பெறு வீரே!

அள்ளித் தருவதில் வள்ளல்

நுங்கோ யாரென வினவி னெங்கோ
நாவுக் கரசரும் நம்பியா ரூரரும்
பாவியல் தண்ட பாணி சுவாமிகளும்
மேவிய சிறப்பின் மேலோர் பலரும்

ஒவியத் தமிழாய் உயர்ந்து விளங்கிய
தொண்டநன் னாட்டுத் தூய்தமிழ்ச் சான்றோர்!
பண்டைக் குருகுலப் பயிற்சிக் கூடமாய்
விளங்கும் வகையில் வியன்தமிழ் பேசி
விளங்கிடும் தோற்றம் வியப்பின் ஏற்றம்.
தமிழால் வாழும் தமிழர்க் குள்ளே
தமிழ்க்கா வாழும் தனித்தக வாளர்;
எல்லா மாண்பும் இல்லவ ளாலெனச்
சொல்லிய வள்ளுவம் செய்கையிற் காட்டி
எல்லா ரிடத்தும் இன்முகம் காட்டும்
நல்லவர் வல்லவர்; நயப்புறும் அவர்துணை!
என்ன தவமிவர் தந்தைசெய் தாரென
முன்னுரை செய்வார் முதலிற் காண்பவர்;
அன்னதோர் வகையில் அரியபண் பாடும்
பன்னிய தமிழில் பயிற்சியும் உடைய
செல்வன் பழநியும் செல்வி மீனாட்சியும்
சேரச் சிறந்து செழிக்கும் இல்லறம்!
இல்லறம் இருந்து ஏனை அறங்கள்
எல்லாம் செய்யும் நல்லவர் எங்கோன்!
எவர்வந் தாலும் இல்லையென் னாதே
அவரவர்த் தகுதிக் கருந்தமிழ், பொருளை
அள்ளித் தருவதில் வள்ளல்! பாண!
உள்ளிச் சென்றோர் உவக்கும் காட்சியில்
உள்ளம் களிக்கும் உத்தமர் ஆகலின்
இன்றே நம்துயர் இழைபனி வாங்கும்
ஒன்றிய கதிராய் உடனே களைகுவர்;
இன்னே செல்க; இனிதே பெறுக;
நன்றே வாழி! நனிபல ஊழி!

எத்துயர்க் கடலும் ஏகுதல் எளிது!

நுங்கோ யாரென வினவின் எங்கோ
தத்துவத் தமிழெனும் தண்கடல் மூழ்கி
முத்தெடுத் தேநல் முழுத்தகு ஆரம்
நித்தம் புனையும் நினைவுகள் கொண்ட
முத்தர்! அவர்வழி முத்தியின் முன்வழி!
இருவே றுலகத்(து) இயற்கையும் அறிந்த
திருவுடை யாளர்! திறமுடை ஆர்வலர்!
தெய்வச் சிலம்பின் செய்கதை ஆகிய
மெய்மை வணிகர் மேதகு மரபினர்!
உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்
என்கையிற் போல எத்தனை பேர்க்(கு)
அடைக்கலம் தந்த அச்செயல் நினைப்பின்
அடைக்கலக் காதையாய் அளவிற் பெருகும்!
பொருளிலை என்பரைப் போற்றிய திறமும்,
அருளினை வேண்டிய அறிவின் உரமும்,
இருளறி யாமை ஏக்கறும் படிக்கு
திருவிளக் கொளியாய்த் திகழுமெய் யறிவும்
விரிப்பிற் பெருகும்! தொகுப்பின் எஞ்சும்!
இலங்கை சென்றமர் இன்தமிழ் பேசிய
நலங்கள் நவில நாவொன் றாமோ?
இத்தகு நற்குணக் குன்றம் ஆகிய
அத்தன் எங்கோன் அவரடிப் புணையில்
எத்துயர்க் கடலும் ஏகுதல் எளிதால்!
வித்தக இசைபயில் விறலியர் பலரும்
சுற்றம் ஆகிச் சூழிய பாண!

பற்றிய மலையகம் பாயின மயிலம்
மேவுக இன்னே; மேன்மைகள் சூழும்
கோவுகந் திடுபொருள் கூறிய குமரன்
ஓவிய மாகியே ஒங்கும் அந்நகர்
மேவிய இன்பம் மிகப்பெரு குவியே!

சித்தியாரில் சித்தம் தோய்ந்தவர்

நுங்கோ யாரென வினவின் எங்கோ
உலகம் உவப்ப வலம்வரு கதிரின்
நிலவும் பேரொளி நீர்மை சூழப்
பொன்னும் மணியும் பொருந்திற் றன்ன
மின்னும் பெருவரை மேவிய பெருமைக்
கந்தன் காட்சிக் கவின்மிகு மந்நகர்
கந்தாய் இருப்பவர்; காட்சிக் கெளியவர்;
ஐந்துறழ் மூன்றென அமையுபல் லாண்டாய்ப்
பைந்தமிழ்ப் பணிக்களம் பரவிய செயல்கள்
சிந்தைக் கினிய; செப்புதற் கரிய;
வெண்ணெய் நல்லூர் விளங்குமெய் கண்டார்
பண்ணிய மறைநூற் பதவுரை ஆகிய
சித்தி யாரில் சித்தம் தோய்ந்தவர்!
தானயந் தோர்க்கும் தன்னயந் தோர்க்கும்
ஆனவை எல்லாம் அளித்தே உவகை
காணுங் கொள்கைக் காதலர்; அதனைப்
பேணும் நெறிக்குப் பெருந்துணை யாக
மேவுமெய் யன்பின் மேதகும் அவர்துணை,
நாவுக்கினிய நற்றமிழ் வல்லவர்!
இனையயில் விருவரின் எழிலார் மழலைகள்

இனைமலர் முகத்தால் இன்புரை செய்குவர்
இருவரும் சூழ இயற்றிடும் இல்லறப்
பெருமைகள் பேசிற் பெருகுறும்; எந்தை
அகத்திற் பெரிய அகத்தியத் தமிழர்
இகத்திற் சிறந்த இராம தாசரின்
இணையடி பரவி இன்பம் சூழ
மனையில் இருப்பர்; மாண்பின் அவரைக்
காண விழையும் கருத்துளம் கொண்ட
பாண! நீசெலின் பயன்பல பெறுகுவை!
சோறடு பெரும்புகை சூழ்வான் கண்டே
நீரிடு மேகமாய் நினையுந் தோகை
அழைப்பது போல ஆடிடும் இல்முன்
தழைத்துயர் ஆலிற் தங்கிய குயில்களும்
திருநெறித் தமிழிற் தேமொழி பயிற்றும்
தருணம் ஈதே! தங்கா தேகுதி!
நீயெது வேண்டினும் நீட்டியா தளிக்கும்
தாயெனத் தகுநற் தயவுடை யவரைக்
கண்டுகொள் பாண! களிப்புற வாழ்குவை!
உண்டாம் பல்வளம்! ஓங்கி வாழியவே!

தன்னையும் உதவத் தயங்காதிருப்பவர்

நுங்கோ யாரென வினவி னெங்கோ
ஊன்றுகோ லாகி உயர்தமி ழோங்கத்
தோன்றிய கதிர்மணி துலங்கிய சிவபுரி
ஊன்றி உள்ளத்(து) ஊறிய தமிழின்
தேன்சுவை கண்ட தெய்வப் புலவர்.
வேங்கடக் குமரியின் வியன்பே ரெல்லையில்

ஓங்குறுஞ் சென்னை ஒருமா நகரில்
அடையார் தமிழின் அருஞ்சுவை ஒன்றும்
அடையார், எனத்தகும் அடையாறு அதனில்
உலகம் தழுவிய ஒண்தமிழ் ஆய்வு
நிலவும் பெரிய நிறுவனத் தலைவர்
காட்சிக் கெளியர்; கனித்தமிழ்க் காவலர்
ஆட்சித் திறமிகும் அவர்க்கீழ் இருந்து
நினைவும் செயலும் ஒன்றி நின்றொரு
முனைவர் ஆகிடும் முத்தமிழ் முத்தகர்
அருமைத் தமிழ்வளர் தருமை ஆதீனம்
திருவார் குறட்குத் திகழும் பீடம்
எனப்பல மடத்து ஞானிகளிடத்து
மனக்களி றடக்கும் மாதவம் கற்றவர்!
நின்னைப் போலும் நீள்புகழ்ப் பாவலர்!
தன்னை ஏற்று இன்னமு தளித்து
பின்னை உற்ற பெருங்குறை செற்றுத்
தன்னையு முதவத் தயங்கா திருப்பவர்;
என்னை ஏற்ற எளியவர் தலைவர்!
இன்ன தன்மையின் ஏந்தலை நீயும்
காண விரும்பின் கடிது செல் பாண
மாணவர் சூழ மாண்புறு விழிநகர்
காணலாம் நீயுன் கண்களை நம்பிடாய்!
அஃதோர் காட்சி – அளப்பரும் மாட்சி!
விரைதமிழ் ஆர்வ விசைப்புனல் முடுக
நரைதிரை கண்டோர், நன்மகப் பெற்றோர்
பெண்டிர், பெரியவர், திண்டிற லிளைஞர்
எண்டிசை இருந்துவந் திருந்தமிழ் விருந்து
அருந்தும் அதுகண்(டு) இறும்பூது எய்துவை

மேயுறு மேமேல் தோயுறு மாயின்
ஞாயிறு மோர்கால் ஓய்வெடுத் திடலாம்;
பாயிருள் நீக்கும் பணிசெய எந்தை
போயிரா ஞாயிறு புலரா ஞாயிறே!
தோயும் அன்பின் தூயவ ருடனிருந்(து)
ஆயும் தமிழிடை அழகனாம் சிறுவன்
அழைக்கும் போதுவந் தல்லும் பகலும்
உழைத்தற் கென்றே உடலுயிர் நட்பிற்
பிழைத்துளேன்; இந்நெறி பிழைபடேன் என்பதை
மழைத்தகு வள்ளலெம் மன்னவர்க் குரைத்தி!
இன்னே பாண; இனிதே தமருடன்
செல்லுக; செல்லிற் செழிக்கும் செல்வம்;
வெல்லுக வாழ்வில் விளைவது பொலிவே!

நல்லோர்க்கு உதவும் நயனுடையாளர்

நுங்கோ யாரென வினவின் எங்கோ
பூம்புகா ரதனிற் பொருந்திய வணிகராய்த்
தாம்புகழ் மரபின் தமிழ்முது குரவர்!
குலப்புகழ் வேட்ட கொள்கையர் ஆகிச்
சிலப்பதி காரச் செம்மல் ஆனவர்!
விலைபெற இயலா வித்தகர் கல்வி
நிலைபெறச் செய்யும் நிலையுயர் சங்கக்
கலைமகள் அருளால் கனித்தமிழ் கற்றவர்;
தேரியல் கல்வித் திறமிகக் கலைமகட்
தேரிழுத் திடுவிழா தேவரும் வியப்பர்;
நீலமேனி வாலிழை பாகன்
அலமர் நீழலில் அறமுறைப் பதுபோல்
சீலம் மேவுமெஞ் செல்வர் தானும்
ஆல மரத்தெதிர் அமர்ந்தே நாளும்

தெய்வத் தமிழ்ச்சுவை தெரிந்துரை செய்யும்
சைவப் புலவர்! சால்புயர் வளவர்!
பட்டி தொட்டிகள் பாமரர் புகழும்
பட்டி மன்ற மாமணிப் பாவலர்!
ஐந்திரு பாட்டுடன் அமையுமெண் தொகையாம்
பைந்தமிழ்க் காவலர்! பலர்புகழ் ஞாயிறு!
ஞானமெய் கண்டவர் நவின்ற சீர்சிவ
ஞானபோதச் செம்மல்! நல்லோய்!
எதுவொரு கலையும் இயலா தோரையும்
முதுகலை முதற்பல முடித்திடச் செய்பவர்;
என்னுரை கொடுநீ எந்தையை முதுவராய்
எண்ணிச் செலினோ ஏமாற் றம்தான்!
இறைவன் கொடுத்த பெருவர மாகித்
துறைபல நிறைபுகழ்த் துணைவி யாரும்
நிரையிரு மக்களும் நெஞ்சு நேர்தலில்
உள்ளூர்ப் பழுத்த பயன்மர மற்றே
காண்டல் விருப்புடன் கமழுங் கலைஞ!
ஆண்டகை அவரைக் காண்டஅப் போழ்தே
வாழ்த்திடும் உன்வாய்; வணங்குமுன் கைகள்;
தாழ்ந்திடுஞ் சென்னியெந் தலைவமுன் ஆங்கே;
எந்தை மலர்வாய் இன்தமிழ்த் தேனுண்
சிந்தை யாளர்கள் சேர்குவர் தேனிபோல்!
தேனிக ளாகிய மாணவர் குழாமிடை
நானிருப் பதுவோ நனிமிகச் சிறப்புடன்;
என்போ லாகும் எண்ணமுண் டேல்நீ
அன்போ டியைந்த அப்பனை அடைகுவை;
வீழ்ந்திட லாமுன் வினைப்பகை யெல்லாம்;
சூழ்ந்த நல்லருட் சுகமிகப் பெறுகுவை;

வேண்டிய வேண்டியாங் கெய்துவை; வாழி!
யாண்டுபல் லூழி இனிதுவா ழியவே!

பாவுரை செய்வதில் நாவுக்கரசர்

நுங்கோ யாரென வினவி னெங்கோ
நான்காம் சங்கம் நலமுறக் கண்ட
பாங்கினிற் தேவராம் பாண்டித் தேவர்;
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தலாம்
இன்னுரை தன்னைத் தன்னுளம் கொண்டு
பொன்னொளிர் மன்றிற் பொதுநடம் புரியும்
மின்னொளிர் சடையன் மிகமகிழ்ந்(து) உவக்கப்
பன்னிய தமிழ்க்கலைப் பாங்குறக் கழகம்
அமைத்து வழங்கிய அண்ணா மலையார்;
காடுகள் வெட்டிக் கடுநிலம் திருத்தி
நாடுகள் ஆக்கி நற்கலை வளர்த்த
பீடுயிர் பெரியர் பேரழ கப்பர்;
செல்வமெல் லாமும் சீர்கலைக் காக்கிய
பல்லோர் புகழும் பச்சை யப்பராம்
ஏழைகள் போற்றும் இத்தகு வழியில்
வாழையின் வாழையாய் வளர்புகழ் மரபினர்
பொதுவயலாகப் புதுவயல் தன்னில்
மதுமலர் மேவும் மாதவக் கலைமகள்
சங்கமும் பள்ளியும் சால்புறக் கண்டவர்;
தங்கத் தமிழரச் சங்க முன்னவர்;
சோம்ப லோய்வெனும் சொற்க ளெதுவுந்
தாம்பயல் வாழ்விற் தவறியுங் காணார்!
நாம்புக ழித்தகு நல்லவர் தலைவரைத்
தாம்காண் வேட்கை தானுறு பாண!

நீகாண் விழைவில் நிறைபயன் பெறுகுவை!
கோமான் இந்நாட் குலவுவே ரன்பில்
மகிழ்ந்தே பலருடன் மயிலத் திருப்பர்;
இனிக்கும் நாளில் இல்லம்வந் தோர்க்குத்
தனிப்பெருங் கருணை அருள்பெருந் தலைவர்!
தீபா வளியாம் திருநாட் காலையில்
நீபா டிடுநல் நிறைதமிழ் பயிலும்
பாவாம் ஆடை பாங்குடன் ஏற்றுப்
பட்டா டைகளும் இட்டமாய்த் தருகுவர்;
ஞான வேட்கையில் ஞான சம்பந்தராய்,
பாவுரை செய்வதில் நாவுக் கரசராம்
அன்னவர் தமிழுக்கு மன்னவர் அவரை
உன்னிறை யாக உன்னிடில் உயர்குவை;
என்னரும் பாண! என்னினித் தயக்கம்
இன்னே செல்க! இனிதே பெறுக!
மன்னா உலகில் மன்னிடு நற்கவி
பன்னிப் பரவிப் பாங்குற வாழி!
வாழிய! வாழி! வாழிபல் ஊழி!
ஏழிசைத் தமிழாய் வாழிய இனிதே!

புதுவரலாற்றுப் பொன்னேடு

நுங்கோ யாரென வினவி னெங்கோ
மறைமலை முதலாத் துறைபல முற்றிய
நிறைபுலச் செவ்வியர், நீள்புகழ் போற்றிய
மயிலம் தமிழர் பயில்கல் லூரியின்
எயிலாய் அமைந்த எழிலார் திருவினர்;
நீரறம் நிழலறம் ஆர்சுவை உணவருள்

பேரறம் ஒருங்கே பிறங்கிடச் செய்யும்
அறத்தின் செங்கோல் ஆய்கதி ரனையர்!
தென்புலவர், தெய்வம், விருந்தோ டொக்கல்
என்புலம் யாவும் இனிதே ஓம்புவர்!
தாம்வாழ் பதியில் தகவுறு பலரைத்
தம்பதி யாக்கிய இம்பர் கோமான்!
பூசத் திருநாள் பேசா திருந்தே
ஈசன் மகற்கா காவடி ஏந்தும்
ஆசான் என்னகம் அமர்தலின் யானுமோர்
பூச லாரெனப் பொருந்துதல் தகுமால்?
ஆட்டுவித் தாலெவர் ஆடா தாரென
நாட்டிய மயிவினை நடம்பயில் மருகில்
பாட்டிசைக் கேற்பப் பாதச் சுவடுகள்
நாட்டிய மரபினைக் காட்டி நடக்கும்
ஆட்டம் கூட அவரறி கலையே!
நாட்டம் கொள்ளுள நற்றமிழ்ப் பாண!
என்னினித் தயக்கம்? இங்கென் தேக்கம்?
மன்னவ ரிந்நாள் மயிற்குன் றுறையுங்
கன்னித் தமிழிளங் கடவுட் கோட்டம்
மன்னிய விழவுறு மன்றி லிருப்பர்
ஈட்டும் புகழின் இசைவல் லோயஅக்
கூட்டத் திடைநும் குழுமிய விறலியர்
ஆட்டம் சூழ அரவடிச் சேர்குவை!
நும்மகன் என்றே நுவலும் வேட்கைத்
தம்ம ஒருவன் அனுப்பி னென்றச்
செம்முது குரவர்ச் செவியிற் செப்புக!
செம்மைகள் சேர, இம்மையில் மும்மை
யாநலம் கூட நீநலம் பெறலாம்;

பாநலம் கேட்டுனைப் பரவுவார் எந்தை;
என்னுரை கேட்டெம் மன்னரைக் கண்டு
தன்குறை நீங்கியோர் முன்னுரை எல்லாம்
புதுவர லாற்றுப் பொன்னே டாகும்!
அதுவருங் காலத் தற்புத மாகும்!
குறிவைக் காதவர் கொடுப்பவை பெற்றபின்
அறிகுவை என்னுரை முழுமைமெய் யென்றே!
விரைக பாண விறலிய ருடனே!
விழையும் வாழ்வில் விளையும் பொலிவே!

ஏற்றிடும் ஏணி

நுங்கோ யாரென வினவி னெங்கோ
குலத்திற் கொருபெரு குணத்தின் குன்றாம்
நலத்திற் சிறந்த இலக்குமித் தாயும்
தாமுள பொருளாற் தமிழறங் காக்கும்
யெ மு மரபின் ஏந்தலாம் வீர
பழநி யப்பராம் பண்புயர் தந்தையும்
பழவினைப் பயனால் பயந்தநற் செல்வர்!
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாய்
எண்ணி யுயர்ந்தோர்; எனதுயர் தெய்வம்;
ஆயுள மிகவுந் தோயுமென் போலுள
சேயுளஞ் செழிக்கச் செல்வழி காட்டும்
முனைவர் ஆயவர்; முனைப்புள முத்தர்!
மாணவர் பலர்க்கு மாண்புறு மாசான்
தானவர் ஒருகால் மாணவ ராகி
மதுரைப் பல்கலை முதுகலை பயின்று
மதுரத் தமிழ்த்தே னதுமிக வுண்டவர்!
ஆயிரக் கணக்கில் அவண்பயின் றோரில்
பாயிர மாகிப் பத்தாம் தரத்தில்

வென்றதைக் கேட்டே என்னுளம் வேட்டேன்!
சொல்வதும் அதனைச் சொல்லியாங் கியற்றி
வெல்வதும் எங்கள் வித்தகர் வித்தை!
சென்னை, புதுவை, திகழ்கா ரைக்குடி,
மன்னும் விழிநகர் மற்றுமெங் குள்ள
இம்பர் உலகின் இன்கவி யான
கம்பனுக் கமைந்த கழகமெல் லாமும்
இடிமுர சாகி இன்தமிழ் பேசி
முடிமா மணியாய் முன்னிலை பெற்றவர்
கொடையிற் கொடுமுடி; கொள்கையிற் பிடிப்பு;
நடையில் நேர்மை; நாவில் சீர்மை;
உடையில் தூய்மை; உணர்வில் தாய்மை;
விடையில் தெளிவு; வினையில் துணிவு;
நீற்றெழில் மேனி! நிறைதமிழ்க் கேணி!
ஆற்றலில் தேனி! ஏற்றிடும் ஏணி!
அறிவுக் கரையிற் சேர்ப்பதில் தோணி!
அறிஞர் போற்றும் அருந்தமிழ் ஞானி!
ஏழிசைத் தமிழ்வல யாழிசைப் பாணநீ
சூழிசை நடம்பயில் சுந்தர விறலியர்
உடன்வரச் செல்குவை; உடனே செல்குவை;
ஆற்றும் பணிகள் ஆயிர மிருப்பினும்
ஏற்றுனைப் போற்றுவர்; இன்னாள் நன்னாள்
காணும் பொங்கலாம்; காணுக சென்றே!
பேணுக வுன்றன் பெருவாழ் வதனை!
பூணுக பொற்பூ! பொலிகநல் வளமே!

மங்கலம் பொலிய மன்னவர் ஆனார்

நுங்கோ யாரென வினவி னெங்கோ,
எப்பரி சாயினும் ஈத்தல் நன்றெனும்
யெ. பெரி வீர பழநி யப்பரின்
புதல்வர்! செல்வப் புதுவயல் செல்வர்!
முதல்வர் இந்நாள்! முனைவரும் ஆனார்!
தஞ்சை, சென்னை, தமிழண் ணாமலை,
விஞ்சும் புதுமை கொஞ்சம் புதுவை
எனப்பல வாகிய பல்கலை யாவும்
மனக்கினி தாகி மகிழ்ந்தே யேற்ற
சீரது மிக்க சிந்தனை யாளர்!
பாரதி தாசன் பல்கலை வழியில்
முதுகலை முதலா முத்தமிழ் பயிற்றும்
முதுபெரு நிறுவன முதல்வ ரானார்!
சன்மார்க் கத்து நல்லகல் லூரி
வளம்பெற வேட்ட உளநிறை யாளர்
புலம்பல தொகுத்த புகழ்மா ணிக்கம்,
தமிழின் காதல் தகைபெறச் சொற்ற
தமிழக் காதலர் தானுவந் தழைத்திட,
மற்றவர் மகிழ்வில் மனநிறை வெய்தக்
கற்றவர் எந்தை கனிவுடன் ஏற்றார்!
தங்கிப் பயின்ற தமிழ்க்கல் லூரியில்
மங்கலம் பொலிய மன்னவர் ஆனார்!
வித்தகப் பண்புகள் மொத்தமு முடைய
முத்தப் பர்தாம் முத்தாய், மணியாய்
குன்றாப் புகழில் குன்றொளிர் விளக்காய்
ஒன்றா உலகின் உயர்தமிழ் நிலவாய்
ஒளியளித் தென்றும் களியுறு குவரே!

அளிபெற விழையும் ஆர்வல! நீயும்
பொன்னம ராவதி நன்னகர் சேரில்
என்னவ ரிருக்கை எளிதில் தேர்குவை;
அமரா தெழுக – அமரா வதிக்கே;
தமருடன் தொழுக! தண்டமிழ் மிழற்றுக!
மேலைச் சிவபுரி சோலைப் பதியில்
மாலைச் சூரியன் மகிழ்கதிர் நீட்ட
ஊன்றுகோல் ஆகி உயர்தமிழ் வாழத்
தோன்றிய கதிர்மணி தோற்றம் கண்டதில்
பணிநிறை வுறூஉம் மனிதருள் மணியை
அணிபெற வணங்கிப் பிணியுள் உணங்குதி!
நயந்துநீ வேட்டவை நல்குவர் நல்லவர்!
வியந்துநீ மகிழ்குவை; விரைந்துநீ பறந்திடு!
என்னருள் மன்னர் இன்செவி யுழையிச்
சின்னவன் வரவும் செப்புக மாதோ!

(மீனாட்சி நூலகம் வெளியீடு நவம்பர் 1991)

கருவிநூற்பட்டியல்

1. நாச்சாத்தாள் உலகமாயாள் தாலாட்டு (1967),
2. முப்பொருள் இயல்பு (1978),
3. சிந்து இலக்கியம் (1983),
4. திருமுறைகளில் அகக் கோட்பாடு (1986),
5. சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்கள்(1987),
6. சிவஞான சித்தியார் நூல்கள் ஓர் ஆய்வு (2002).
7. ஞானாமிர்தம் விளக்கவுரை(2002),
8. சிவஞான சித்தியார் சுபக்கம் விளக்கவுரை (2003),
9. திருக்கோவையார் (2006)

மலர்கள்

1. மயிலம் திருப்புகழ் திருப்படி விழாமலர் (1980),
2. சரசுவதி சங்க மணிவிழா மலர்(1982),
3. திருக்கோயில் வழிபாட்டு விதிகள்(1986),
4. பிள்ளையார் (1987),
5. பா.நமசிவாயம் மணிவிழா மலர் (1993),
6. புதுவயல் கைலாச விநாயகர் குடமுழுக்கு விழா மலர்(1995),
7. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை முத்துவிழா மலர்(1999),
8. திருக்குறள் பன்முகப் பார்வை(2000),
9. இன்றைய நோக்கில் பதினெண் கீழ்க்கணக்கு(2002),
10. சிங்கப்பூர் பன்னிருதிருமுறை மாநாட்டு வெள்ளி விழா மலர்(2005)

மற்றும் பழ. முத்தப்பனார்தம்
கோப்பில் உள்ள கடிதங்கள் மற்றும் குறிப்புகள்.

எமது வெளியீடுகள்

கவிதை நூல்கள்

- மனச்சுவடுகள் - கவிஞர் மரு. பரமகுரு
- சீதாயணம் - சேதுபதி

சிறுகதை

- பாரிவேட்டை - சேதுபதி

ஆய்வு நூல்கள்

- மானுடம் பேணிய தமிழ்
  - முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்
- தமிழ் இலக்கண உணர்வுகள்
  - பேரா. ஆ.சிவலிங்கனார்
- திருநாவுக்கரசர் தேவாரத்தில் சிவமூர்த்தங்கள்
  - தமிழாகரர் முனைவர் பா.சுந்தர்.

வரலாற்று ஆய்வு நூல்கள்

- பறம்புமலை திருக்கொடுங்குன்றம் வரலாறு
  - கவிஞர் மரு.பரமகுரு
- அருவியூர் நகரத்தார் அறப்பணிகளும் வரலாறும்
  - புலவர் சீ. இலட்சுமணன்

கபிலன் பதிப்பகம்

12, 7 ஆவது குறுக்குத்தெரு

பாரதிநகர்

புதுச்சேரி – 605 008.



பைந்தமிழ்க் காவலர் பழ.முத்தப்பனார், புதுவயல் ஸ்ரீசரசுவதி சங்கச் செயலர்; மயிலம் சி.பா.சு. தமிழ்க் கல்லூரியின் முன்னைப் பேராசிரியர்; பயின்ற கல்லூரியாம் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியை மீண்டும் பாரறியச் செய்த பைந்தமிழ்ச் செல்வர்; அதன் முன்னை முதல்வர்; இன்று, திருச்சிராப்பள்ளி செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர்; சிறந்த நிர்வாகி; நாடறிந்த நல்ல பேச்சாளர்; பட்டிமன்ற மாமணி; அயலகம் சென்று தமிழ்பரப்பிவரும் அருந்தமிழ்த் தொண்டர்; பன்னூலாசிரியர்; பதிப்பாளர்; சைவசித்தாந்தச் செந்நெறியில் தோய்ந்த சீலர்; சைவமும் தமிழும் தழைக்க உழைக்கும் சிவநெறிச் செல்வர்; அரிமா சங்கம், கம்பன் கழகம் முதலான அமைப்புகளில் இணைந்து பணியாற்றிய இனிய தொண்டர்; திருவாவடுதுறை, தருமை, குன்றக்குடி ஆதீனக் குருமகா சந்நிதானங்களின் அருளுக்குப் பாத்திரமாகி விருதுகள் பெற்றவர்; இல்லறமாய நல்லறம் பேணும் இனிய குடும்பத்தர்; மனிதநேயம் ததும்பும் இம்மனிதர் மணிவிழாக் காணும் நாயகர்; சொல்லாலும் செயலாலும், தமிழின் கல்வி வளர்ச்சிக்கும் கலைவளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய தொண்டுகளின் அணிவகுப்பை நினைந்து போற்றும் ஒரு வரலாற்று நூல் இது!

கபிலன் பதிப்பகம்

12, 7 ஆவது குறுக்குத் தெரு,

பாரதிநகர் - புதுச்சேரி. 605 008.